போர் வெறியோடு புறப்பட்டவனை
தர்ம நெறி நிற்கப் பணித்த தேசம்

# கலிங்கம்

பல்சுவை இருமாத இதழ்

போர்-01 பரணி - 05

ISSN - 2279 - 1868

ஏப்பிரல் - ஆகஸ்ட் 2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்திடாத வீரம்

மண்டியிடாத மானம்

# கலிங்கம்

ஏப்பிரல்– யூலை, 2013

போர் – 01 பரணி – 05


323, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 222 0321 kalingaminfo@gmail.com

தொலைநகல் - 021 222 0321 Cell: 0772297265



ஆசிரியர் குழு -

திரு.செ.கமலக்கண்ணன்

திருமதி.ர.தர்மினி

திரு.வ.பார்த்திபன்

ஆலோசகர் -

திரு.தி.நடனசபேசன்

அலுவலக உதவி -

செல்வி.ச.தவரூபா

ஓவியக்கலை -

திருமதி.எஸ்.மேரிடியூலா

திரு.எஸ்.சந்திரசேகர்

இதழழகு -

தாயகம் டிஜிற்றல்,

பரமேஸ்வராச்சந்தி,

யாழ்ப்பாணம்


பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே

**விளம்பரங்களுக்கு**

கலிங்கம், #323, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

யாழ்.ஏய்ட், #38, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

☎ 0094 21 321 4691

**சந்தா தொடர்பான விபரங்கள்**

(ஓர் ஆண்டுக்குரியது, தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | 600 ரூபா |
| இந்தியா | 750 ரூபா |
| கனடா | 45 கனடியன் டொலர் |
| இங்கிலாந்து | 35 பவுண்ஸ் |
| அவுஸ்ரேலியா | 45 அவுஸ்ரேலிய டொலர் |
| ஐரோப்பா | 40 யூரோ |
| ஏனையவை | 45 டொலர் |

# கலிங்கத்தில்...




பக்கம் 14

இலங்கைக் களத்தில்

அமெரிக்க கழுகு - சீன ட்ராகன் - இந்திய யானை



பக்கம் 20

கந்தரோடை மறைந்து போகும் வரலாறு



பக்கம் 30

தோள் சீலைப் போராட்டம்



பக்கம் 52

தெரு வெளிநாடகம் ஊடாக வாசிப்பின் மேம்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களிடம் இருந்து...



# அதிசயம் நிகழுமா?

கலிங்கம் பரணி -5 மூலம் சந்திப்பதில் மீண்டும் மகிழ்ச்சி அடைகின்றோம். இம்முறையும் கலிங்கம் வெளிவர பெரிதும் காலதாமதமாகிவிட்டது. எவ்வளவு முயன்றும் எம்மால் விரைவில் வெளியிட முடியாது போய்விட்டது. தொடர்ந்து இத்தகைய சாக்குப் போக்குச் சொல்லுவது வாசகர்களாகிய உங்களை சில வேளை கடுப்பேற்றும். ஆனால் அது தான் நிஜம். நாங்கள் பணபலம், ஆள்பலம் கூடியவர்கள் அல்ல.நாங்களும் அன்றாடம் காச்சிகள் தான். நாம் இரண்டு மூன்று பேர் தான் இதனைப் பொறுப்பேற்று பாடுபடுகின்றோம். ஆனால் இந் நிலையில் எம் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது. இதனால் நாங்களும் சலிப்படைந்து விட்டோம். அழுத்தம் ஒரு இடம் என்றால் சமாளித்து விடுவோம். அது பல இடங்களில் இருந்து பலமாக பிரயோகிக்கப்படுகின்றது. எனவே கலிங்கத்தின் பரணியை அடுத்த இதழுடன் வெளியிடுவதைத் நிறுத்தத் தீர்மானித்து உள்ளோம். ஆனால் அடுத்த பரணி வெளிவரும். அதை தொடர்ந்து வெளிவந்தால் அதிசயம். அடுத்த பரணியுடன்தான் பெருமளவு சந்தாதாரர்களின் அங்கத்துவக்காலம் முடிவடைவதால் அடுத்த பரணி நிச்சயம் வெளிவரும். இதேவேளை இப் பரணியில் இருந்து கலிங்கத்தின் விலையை 80 ரூபாவாக உயர்த்த தீர்மானித்துள்ளோம். எனவே வாசகர்கள் இதனை ஏற்று ஆதரவு அளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

அழுத்தங்களுக்கும் மத்தியிலும் அடுத்த பரணியில் சந்திப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகோரிகள்** எனும் சொல்லாடல் தமிழில் சித்தர்கள் என நாம் சொல்லுகிறோமே அதன் வடமொழி வழக்குதான். அகோராத்ரா என்றால் காலம் என அர்த்தம். இவ்வார்த்தையிலிந்து தான் ஹோரை எனும் தமிழ் சொல்லும், ஹவர் எனும் ஆங்கில சொல்லும் வந்ததாக ஒரு பேச்சு உண்டு. இவர்களை அஹோராத்ரத்தை கடந்ததால் அஹோரிகள் எனவும் சொல்லலாம். காலத்தை கடந்த நிலையில் இருப்பதால் இவ்வகை யோகிகள் காலபைரவ அம்சமாக வணங்கப்படுகிறார்கள்.

சற்றேரக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கபாலிக பிரிவிலிருந்து தோன்றிய ஒரு பிரிவுதான் அகோரிகள் எனப்படும் நர மாமிசம் உண்ணும் அமானுஷ்ய இந்து சாதுக்கள் பிரிவு. தீமைகளை அழிக்கும் கடவுளான சிவனையே தங்கள் முதலும் கடைசியுமான தெய்வமாக அகோரிகள் வழிபடுகிறார்கள். இதனால் சிவனின் மைந்தர்கள் என கூறி கொண்டு கங்கை நதியின் இடுகாடுகளில் வாழ்ந்து வருபவர்கள் . இவர்கள் தான்தோன்றி தனமாக சுற்றி கொண்டு இருப்பதாய் "நான் கடவுள் "படத்தை பார்த்தவர்கள் அறிந்து இருப்பார் . அகோரிகள் என்கிற சாமியார்கள் மனிதநேயம் கொன்று மனிதர்களின் மாமிசத்தை சாப்பிடுவதை பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். அது நம் உயிரை உறையவைக்கும் காட்சியாக இருக்கும். இவர்கள் எப்போதும் சிவா பானம் தான் புகைத்து கொண்டு இருப்பார்கள் அதாவது கஞ்சா தான் இவர்களுக்கு சிவா பானம் அவர்களை அடுத்து இப்போது சீனாவில் ஒரு கும்பல் இளம்பெணகளை உயிரோடு வெட்டி சமைத்து சாப்பிடும் காட்சி இணைய தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த மனித மிருகங்கள் ஒருபெண்ணை உயிரோடு ஆட்டை அறுப்பதுபோல் அறுத்து கண்டம்துண்டமாக வெட்டி சமைத்து சாப்பிடுகிறார்கள்.(அடுத்த பரணியில் இதைப்பற்றி பார்ப்போம்) இவர்களின் முன்னோடிகள் வேறு யாரும் அல்ல இந்திய அகோரிகளே.

இறந்து போன மனித உடலை கங்கை கரை ஓரத்தில் அரிச்சந்திரன் காவல் செய்த அரிச்சந்திர மயானத்தில் எரிப்பதும், கங்கை நீரில் வீசுவதும் இறந்து போன மனிதனை சொர்கத்திற்கு கொண்டு செல்லும் என்பது வழி வழியாக







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலை நடுங்கும் கொடூரம்

இறந்து போன மனித உடலை கங்கை கரை ஓரத்தில் எரிப்பதும், கங்கை நீரில் வீசுவதும் இறந்து போன மனிதனை சொர்கத்திற்கு கொண்டு செல்லும் என்பது வழி வழியாக இந்து சமயத்தில் பின்பற்றப்படும் ஒரு நம்பிக்கைஅகோரிகள் இப்படி வீசபடும் உடலை கங்கையிளிருந்து வெளியே இழுத்தும் அவற்றை எரிந்தும் எரியாத நிலையிலும் உண்கிறார்கள் .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பாஸ்போட், அடையாள அட்டை மற்றும் உட்புற வெளிப்புற படப்பிடிப்புக்கள்
நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தை பிரதியாக்கம் செய்தல்
பழுதடைந்த படங்களை நவீன முறையில் பழமை குன்றாது புதுப்பித்தல்
கறுப்பு வெள்ளை படங்களை அசல் கலர்ப் படத்திற்கு நிகராக கலர் படமாகுதல்
டிஜிட்டல் அல்பம், ஸ்டோறிபுக் அல்பம் வடிவமைத்தல், பைண்டிங் செய்தல்
விசிடிங்காட், சேட்டிபிக்கேட் போன்றவற்றை வடிவமைத்து பிறிண்டிங் செய்தல்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் நாடுங்கள்


**Vista Vision**

**Digital Colour Lab**

52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
021 222 5187

347, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 222 8510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமயத்தில் பின்பற்றப்படும் ஒரு நம்பிக்கை அகோரிகள் இப்படி வீசபடும் உடலை கங்கையிலிருந்து வெளியே இழுத்து அவற்றை எரிந்தும் எரியாத நிலையில் உண்கிறார்கள் . இந்த அகோரி சாமியார்கள் கஞ்சா அடிப்பது , சாராயம் குடிப்பது என்று எல்லா தீயபழக்க வழக்கங்களையும் சிவனின் பெயரை சொல்லி செய்கிறார்கள் . இவர்கள் இப்படி ஆடை களைந்து எதன் மீதும் பிடிப்பு அற்று திரிவதால் இவர்களை முற்றும் துறந்தவர்கள் என ஒரு சாரார் நம்பி வணங்குவதை காண்கிறோம் . இந்த அகோரிகள் சுத்தம் அசுத்தம் என எதனையும் பிரித்து பார்ப்பதில்லை. இந்த விஷயத்தை பற்றி துலாவிய பொது சில அடித்தட்டு மக்கள் குழந்தை பாக்கியம் வேண்டி பெண்கள் மாதவிடாய் காலங்களில் இந்த அகோரி சாதுக்களிடம் உடல்உறவு கொள்கிறார்களாம் . இப்படி உறவு கொள்வதனால் குழந்தை பாக்கியம் கிட்டுமாம். என்ன ஒரு மோசமான நம்பிக்கை ! இவர்கள் மனித கபால ஓட்டில் உண்பதும் குடிப்பதும் இவர்களுடைய தினசரி நடவடிக்கையில் ஒன்றாக இருக்கும். உடலுக்கு ஆடை ஏதும் அணியாமல் மனித எலும்புகளால் ஆன மாலையும், இடது கையில் மண்டை ஓட்டையும், வலது கையில் மணியும் கொண்டு திரிவது இவர்களுடைய அடையாளம். என இந்த அகோரி சாமியார்களை பற்றி சிலர் கூறுகின்றனர் இவர்கள் ஹிந்துமத ஆன்மீகவாதிகள் என்றும் இவர்கள் இப்படி நிர்வாணமாக இருப்பதும் ஒருவகையில் கடவுள் பக்தி என்றும் அதற்க்கு சில புராண கதைகளையும், சில ஆதாரம் இல்லாத செய்திகளையும், கதைகளையும் சொல்லி அகோரிகள் குறித்து சப்பை கட்டு கட்டுகிறார்கள் .இவர்களுடைய காட்டுமிரண்டி தானமான செயல்களுக்கு சில ஹிந்து அமைப்புக்களின் ஆதரவு எப்போதும் உண்டு என்பது வேதனையான விடயம்

மனிதன் நாகரிகத்தின் உச்சியில் இருக்கிறான் என்றே சொல்ல வேண்டும் அந்த அளவுக்கு உலகம் பல நவீன விஞ்கான கண்டுபிடிப்புகளின் உச்சத்துக்கே சென்று விட்டது என்று சொல்லலாம். இந்நிலையில் இந்த அகோரிகள் மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்டு நிர்வாணமாக நரமாமிசம் தின்று திரிவதை பார்க்கும் போது இவர்களை எவ்வாறு சொல்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிகப் பெரும் வீரர்களுடன் தனிச் சமர் புரிந்து மரண தேவனுக்கே மரண வேதனையைக் கொடுத்து மண் மீது வீழ்ந்த வீர அபிமன்யுவின் கதையைத் தாய் ஜிஜாபாய் கூற அதனை மிகுந்த கரிசனையுடன் கேட்டுக் கொண்டிருந்தான் சிறுவன் சிவாஜி. அவன் மனதில் வீழ்ந்தால் இவன் போல வாழ்ந்து சாக வேண்டும் என்ற எண்ணமே தலை தூக்கி இருந்தது. சிறுவன் சிவாஜிக்கு தாய் ஜிஜாபாய் அறிவு விடயங்கள் மாத்திரமன்றி வீரக்கதை களை தாய் நாட் டின் மீதும் மக்கள் மீது ம் பற்று ஏற் ப்படும் வண்ணம் எடுத்துக் கூறி அவன் மனதில் அழிக்க முடியாத தன் நம்பிக்கையினை ஏற்படுத்தியது டன் சமயத்தின் மீதும் ஆழ்ந்த பக்தி ஏற்படவும் வழி வகுத்தார். இது மாத்திர மின்றி விடுதலை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை நாட வேண்டியதன் அவசியமும் தாயால் உணர்த்தப் பட்டது. அன்னியர்களான நிஜாம் ஷாவின் ஆட்சியினால் ஜிஜாபாய் அநியாயமாக தனது தந்தையையும் மூன்று சகோதரர்களையும் இழந்து கேவலமான அடிமை வாழ்வு வாழ்வது தொடர்பாகவும் எடுத்துக் கூறி அன்னிய அரசியல் செல்வாக்கின் மீதான வெறுப்பையும் சிவாஜி மனதில் விதைத்தாள்.


சிவாஜிக்கு சிறுவயது முதல் சோற்றுடனும், பாலுடனும் சேர்த்து ஜிஜாபாய் ஊட்டிய வீரமும் தீரமும் பின்னாளில் மராட்டிய தேசத்தை மற்றவர்கள் மலைப்புடன் பார்ப்பதற்கு வழிவகுத்தது. ஆம் வளம் குறைந்த வறண்ட மராட்டிய தேசத்தில் இருந்து அணு அணுவாக அளந்து நேர்த்தியாக செதுக்கிய சிற்பம் போன்று ஆய கலைகள் அறுபத்தி நான்கும் ஒருங்கே பெற்று சிம்மாசனத்தில் அமர்ந்து அன்னிய அடக்கு முறை ஆட்சிக்கு எதிராக ஆயுதம் தரித்தவன்தான் "சத்திரபதி சிவாஜி".

தாய் ஜிஜாபாய் மீதும் குல தெய்வம் பவானி மீதும் உயிரினும் மேலான பக்தியை வைத்திருந்த சிவாஜி ஒருநாள் தனது நண்பர்களுடன் வீரர்களுடனும் ரோஹிதேஸ்வரா கோயிலுக்குச் சென்று சுயராஜ்ஜியத்திற்காக இரத்தத்தால் உறுதி மொழி எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உக்கிரமான சமர் ஆரம்பமானது பல ஆயிரம் படையினரை 300 மராட்டியர்கள் மாத்திரம் எதிர்த்து நின்றனர். தங்கள் தலைவனுக்காக ஒவ்வொரு மராட்டிய வீரர்களும் தங்கள் இன்னுயிரை ஆகுதி ஆக்கிக் கொண்டிருந் தனர் இவ் யுத்தம் மராட்டியர்களின் தன்மான உணர்வை தரணிக்கே எடுத்துக் காட்டியது.**



# வீரத்தின் விளைநிலம்



கொண்டான். மராட்டிய மண்ணில் பிறந்த ஆயிரக்கணக்கான வீர மறவர்களை தனது படையில் இணைத்து வெளிஉலகிற்கு தெரியாத வண்ணம் மிக இரகசியமாக கடுமையான இராணுவப் பயிற்சி அளித்து தனது இராணுவத்தைப் பலப்படுத்தினார். 1645ம் ஆண்டு தனது 17வது வயதில் தேர்ந்தெடுத்த மிகச்சிறிய படையுடன் சென்று பிஜப்பூர் பேரரசின் “டோர்னா”கோட்டையை மின்னல் வேக அதிரடித் தாக்குதல் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றி தனது முதலாவது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து அன்னிய ஆட்சிக்கு இனி அடி தான் என சூசகமாகத் தெரிவித்தார். அன்று சிவாஜியால் தொடங்கப் பெற்ற இராணுவ நடவடிக்கை தான் இறுதியில் சாதாரண ராஜ்ஜியமாக விளங்கிய மராட்டிய தேசத்தை சாம்ராஜ்ஜியமாக மாற்றி அமைத்தது. தொடர்ந்து படை நடவடிக்கையை மேற்க்கொண்ட சிவாஜி “கொண்டானா, ராஜ் காட், போன்ற கோட்டைகளையும் தொடர்ந்து புனேயின் பெரும் பகுதியையும் கைப்பற்றியதுடன் மாத்திரமல்லாது கொங்கன் கடற் பிரதேசத்தையும் கைப்பற்றினான்.

பிஜப்பூரை ஆண்ட அப்ஜன்கான் மராட்டியர்களின் மின்னல் வேக தாக்குதலால் நிலை குலைந்து போனான். சிவாஜியை எவ்வாறு எனினும் வீழ்த்த வேண்டும் என்கின்ற எண்ணத்தினால் சிவாஜியுடன் புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றினை மேற்க்கொண்டு சிவாஜியை கொல்லத் திட்டமிட்டான் ஆனால் ஒற்றர்கள் மூலம் இதனை முற்கூட்டியே அறிந்த சிவாஜி தக்க முன்னேற்பாடுடன் பிரதாப்கட் கோட்டையின் அடிவாரத்திற்குச் சென்றான். அங்கு இடம் பெற்ற உரையாடல்களின் பின்னர் மிகவும் உயரமான அப்ஜன் கான் சிவாஜியை தழுவுவது மாதிரி நடித்து அவர் கழுத்தை நெரித்துக் கொண்டு மறு கையால் இரகசியமாக வைத்திருந்த குறு வாளினால் சிவாஜியைக் குத்தினான். ஆனால் உள்ளே கவசம் அணிந்து வந்தமையால் சிவாஜிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. சுதாகரித்த சிவாஜி அப்சல்கானின் தாக்குதலைச் சமாளித்து புலி நகத்தினாலும் குறுவாளினாலும் அப்சல் கானை தாக்கி வீழ்த்தினார்.



ஆப்சல் கானின் இறப்பை தொடர்ந்து அவன்படைகளை அழித்தொழிக்கும் நடவடிக்கையை சிவாஜி ஆரம்பித்தார். ஏற்கனவே தீட்டிய திட்டத்தின் படி பிரதாப்கட் கோட்டையில் இருந்த பீரங்கிகளை குண்டு வீச உத்தரவிட்டார். இது பள்ளத்தாக்கில் இரகசியமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாராட்டிய கலாட் படைக்கு கொடுக்கப்பட்ட சமிக்ஞையாகும். இதனால் தயார் நிலையில் இருந்த மராட்டிய படைகள் அப்சல் கானின் படைகளை வளைத்து தாக்குதலை மேற்கொண்டு அழித் தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. ஈற்றில் ஒரு சிறு தொகை அப்சல்கா னின் படைகளே தப்பி சென்றன. இதில் மராட்டிய படை மகத்தான வெற்றியைப் பெற்றது. இந்த வெற்றி மராட்டியர்களின் மனங்களில் சிவாஜிக்கு கதாநாயகன் அந்தஸ்த்தை கொடுத்தது.சிறு தொகை ஆளணியுடன் ஆயுத பற்றாக்குறைபால் அள்ளாடிக் கொண்டிருந்த மராட்டியர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் யுத்தம் ஏராளமான குதிரைகள், கவசங்கள், ஆயுதங்கள் போன்ற வற்றை அள்ளித் தந்தது. அள்ளிய ஆயுதங்களால் அடுக்காக பல கோட டைகள் சிவாஜியின் காலடியில் வீழ்ந்தன.



சிவாஜியின் வளர்ச்சி மொகலாய பேரரசர் ஔரங்கசீப்பை அச்சம் கொள்ளச் செய்தது. சமகாலத்தில் பிஜப்பூர் சுல்தானின் இராணுவமும் மராட்டியர்களின் வீரம் செறிந்த தாக்குதலில் ஏராளமான உயிரிழப் புக்களுடன் மாராட்டியரின் முன் மண்டியிட்டது. இந்த இழப்பை ஈடு செய்ய மீண்டும் பிஜப்பூர் கோல் ஹாபூரில் சிவாஜியை தாக்கினார். இவ் யுத்தத்தில் மராட்டிய படையணியை வழி நடாத்திய சிவாஜி காலாட் படையை கொண்டு முன்னேறிய பிஜப்பூர் படைகளுக்கு முழு வீச்சுடன் பாரிய அடி கொடுத்து படையின் கட்டமைப்பை உடைத்தான். சம நேரத்தில் பக்க வாட்டில் குதிரைப் படையணியைக் கொண்டு பலமான தாக்குதலை தொடுக்கச் செய்தான். இரு பெரும் தாக்குதலால் படைகள் சின்னா பின்னமாகி ஓடி ஒளிந்தன. ஈற்றில் ஏராளமான குதரைகளும், யானைகளும் ஆயுதங்களும் மராட்டியர்களால் அள்ளப் பட்டன.

சிவாஜியை தோற்கடிப்பதற்காக ஔரங்கசீப்பீன் படைகள் அடில்காஹாவுடன் இணைந்து பெருமளவு இராணுவத்தினரையும் பீரங்கிகளையும் கொண்டு சிவாஜின் ஹலாவை முற்றுகையிட்டனர். பலமிக்க பன்ஹாலா கோட்டையைக் காப்பதற்காக மராட்டியர் கடுமையான் எதிர் தாக்குதல்களை தொடுத்தனர். ஆனால் அடில்ஹாவோ தொடர்ச்சியாக பீரங்கியால் சுட்டுக் கொண்டே இருந்தான். இதனால் மராட்டியர்களினால் முற்றுகையை உடைக்க முடியவில்லை. ஆகவே சிவாஜியும் தேர்ந்தெடுத்த சில வீரர்களும் விஷால்கட் கோட்டைக்குச் தப்பிச் சென்றனர். தப்பிச் சென்ற சிவாஜியை துரத்திப் பிடிக்கவென அடில் ஷாவின் குதிரைப் படையை விரைவாக அனுப்பினான். எதிரிகளின் படை தங்களை நெருங்குவதை உணர்ந்த சிவாஜியின் மராட்டிய சர்தாரான தேஷ் பாண்டே 300 வீரர்களுடன் உயிருள்ளவரை எதிரியின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவது என்றும் அக்கால அவகாசத்திற்குள் சிவாஜியும் ஏனைய வீரர்களும் விஷால் கட்டிற்கு தப்பிச் செல்லவும் முடிவானது.

துரத்தி வந்த அடில்ஷாலின் துருப்புக்களை விஷால் காட் கோட்டையில் இருந்து பீரங்கி சத்தம் கேட்கும் வரை தேஷ் பாண்டே தடுத்து நிறுத்தி கடும் தாக்குதலை தொடுத்தார் வார்த்ததைகளால் வர்ணிக்க முடியாத உக்கிரமான சமர் ஆரம்பமானது பல ஆயிரம் படை யினரை 300 மராட்டியர்கள் மாத்திரம் எதிர்த்து நின்றனர். தங்கள் தலைவனுக்காக ஒவ்வொரு மராட்டிய வீரர்களும் தங்கள் இன்னுயிரை ஆகுதி ஆக்கிக் கொண்டிருந்தனர். இவ் யுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மராட்டியர்களின் தன்மான உணர்வை தரணிக்கே எடுத்துக் காட்டியது. ஈற்றில் 300 மராட்டியர்களினதும் 1286 அடில்ஷாவின் படை வீரர்களின் மரணத்துடன் யுத்தம் நிறைவடைந்தது. சிவாஜியும் பத்திரமாக கோட்டையை சென்றடைந்து இருந்தான்.

1666 இல் மொகலாய சாம்ராஜ்ஜிய பேரரசன் ஔரங்கசீப்பின் ஐம்பதாவது பிறந்தநாள் விழாவிற்கென ஆக்ரா வந்த சிவாஜியும் மகன் சம்பாஜியும் அவமானப்படுத்தப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். ஆனால் பழக் கூடைகளுக்குள் ஒளிந்து சில வாரங்களிலேயே இருவரும் தப்பிச் சென்றனர். தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அழிப்பதற்காக சிவாஜி மீண்டும் பல படை நடவடிக்கைகளை ஆரம்பித்து இழந்து பகுதிகளை மீளவும் தன் வசமாக்கியதுடன் பல புதிய பிரதேசங்களையும் தனது ஆளுகையின் கீழ் கொண்டுவந்தார்.

அருமை நண்பன் தானாஜியின் தலைமையில் சின்க கேலா கோட்டையைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்தார். தனது மகனின் திருமணத்தை கூட இதற்காக ஒத்தி வைத்ததானாகி தானே படைத்தலைமையேற்று உளவறிந்து வீரம் செறிந்த மகத்தான யுத்தத்தை மேற்கொண்டு ஈற்றில் வெற்றியை பெற்றுக் கொடுத்து வீர சொர்க்கம் புகுந்தார். இதனால் சிவாஜி மிகவும் கவலை அடைந்து "கத் ஆலா பன் சின்ஹா கேலா" (கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது. ஆனால் சிங்கத்தை இழந்து விட்டோம்) என கூறினான்.

1674 இல் சிவாஜி ராய் கட் கோட்டையில் உத்தியோக பூர்வமாக சத்திரபதியாக (சத்திரியர்களின் தலைவன் அல்லதுஅரசன்) முடிசூடிக் கொண்டான். இதன் பின்னர் 1676 இல் தெற்கத்தைய இந்தியாவில் மகத்தான வெற்றிகளைப் பெற்று மாராட்டியர்களின் வீரத்தை நிலை நாட்டினான். சிறந்த இராணுவ வல்லுனராகவும், நிர்வாகியாகவும் காணப்பட்ட சிவாஜி தனது தனித்துவமான யுத்த வியூகங்கள் மூலம் தன்னை விட பன் மடங்கு பெரிய எதிரிகளை கூட வெற்றி கொண்டார். இதனை விட இவரின் ஆளுகையின் கீழ் இருந்த பெரும் பாலான பகுதிகள் கடற்கரையாக இருந்தமையால் சிறந்த கடற்படை ஒன்றை உருவாக்கி கடற்படையால் பிராந்தியங்களை பாதுகாத்ததுடன் ஐரோப்பியர்களின் கப்பல்களைக் கூட தடுத்து நிறுத்தும் அளவிற்கு ஆற்றலைப் பெற்றிருந்தார். மிகப் பெரிய கடற்படை தளத்தை உருவாக்க வேண்டும் என்ற அவரின் தொலை நோக்குப் பார்வையால்தான் "இந்திய கடற் படையின் தந்தை" என அழைக்கப்படுகின் றார்.

தனது காலத்திலே மகத்தான மாபெரும் இந்து சாம்ராஜ்ஜியம் ஒன்றை உருவாக்கினார். இவரால் உருவாக்கப்பட்ட இவ்வரசு 1751 – 52 இல் அஹம்தியா உடன் படிக்கையின் படி தம்மை அடக்க நினைத்த மொகலாயர்களைத் தோற்கடித்து இந்தியா முழுவதையும் மாராட்டியர்களின் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இத்தகைய சிவாஜி பாத்திரத்தை கணேசன் எனும் நாடக கலைஞன் தத்ரூபமாக நடித்து பாராட்டு பெற்றமையாலயே அவன் பிற் காலத்தில் சிவாஜி கணேசன் என்று அழைக்கப்பட்ட மாபெரும் நடிகரானார்.

இவ்வாறு சிவாஜி சாதனைகள் பல படைத்து சரித்திரத்தில் இடம் பிடிக்க காரணமாக அமைந்தது. தாயை மதித்து அவர் சொற் கேட்டு நடந்தமையும் குல தெய்வம் பவானியை பரிபூரணமாக நம்பி பக்தி செலுத்தியமையுமே காரணமாகும். எனவே நாமும் தாயையும், தெய்வத்தையும் மதித்துப் போற்றி வரலாறு படைப்போம் வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு பக்கக் கதை

"வீட்டிற்கு உப்பு, புளி வாங்கிப் போட துப்பில்லை இதிலை பருப்பிற்கு வாசம் இல்லையாம்" குசினிக்குள் இருந்தவாறு தமிழ்மதி விரக்தியுடன் குரல் கொடுத்தாள், மாறனால் துக்கத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. வாழ்ந்து என்ன பிரயோசனம். சாகலாம் என்றாலும் தன்னை நம்பி கரம் பிடித்த தமிழ் மதிக்காக சாகவும் முடியவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்து இளநிலை தளபதி யாக இருந்த மாறன். ஆனந்தபுரத்தில் இடம் பெற்ற யுத்தத்தில் ஒற்றைக் காலினை இழந்து இறுதியில் முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று ஒரு வருடத்திற்கு முன்னர் தான் தன்னை நம்பி இருந்த தனது காதலியான தமிழ் மதியைக் கரம் பிடித்து இருந்தான்.

இதுவரை எவ்வாறோ கஸ்ரப்பட்டு வாழ்க்கைப் படகை ஒட்டியவன் தற்போது முடியாமல் கஸ்டப்படுகின்றான். சொந்தமாக தொழில் செய்யலாம் என்றால் பொருளாதார வளம் இல்லை. கூலி வேலைக்குப் போகலாம் என்றால் காலில்லாத நொண்டியால் ஆடி ஓடி வேலை செய்ய முடியுமா? என கேவலமாகப் பார்த்து தொழில் தர மறுக்கின்றார்கள் கௌரவமான தொழில் செய்யலாம் என்றால் கா.பொ.த சாதாரண தரத்திற்கு மேலே படிக்கவில்லையே எவன் வேலை தருவான். துல்லியமாக செல் அடிக்கிறதும் கிளைமோர் வைக்கின்றதும் தானே இயக்கத்தில் இருக்கேக்கை படிச்சது. இதை வைத்து இனி என்ன செய்வது எல்லாம் முடிந்து விட்டதே. இதனை நினைத்தே அழுதான்.

யோசனையில் இருந்தவனை "இரவு சாப்பட்டிற்கு ஒன்றுமே இல்லை ஏதாவது வாங்கினால் தான் சமைக்கலாம் அல்லது தண்ணீரைக் குடித்து விட்டு தான் படுக்கனும்". "தமிழ்மதி குரல் கொடுத்தாள். அவளுக்குத் தெரியும் மாறன் படுகின்ற அவலம் ஆனால் அவளும் தான் என்ன செய்வாள். காலை 9 மணிக்கு வேலை தேடிச் சென்ற மாறன் இரவு 7 மணியாகியும் வேலை கிடைக்காமையால் விரக்தியுடன் வீட்டிற்கு வந்தான். தண்ணீரைக் குடித்திட்டு படுப்பம் நாளைக்கு ஏதாவது செய்யலாம் என எண்ணிய படி வீட்டை அடைந்தவனிடம் தமிழ்மதி வாசலிலேயே ஏதாவது வேலை கிடைத்ததா எனக் கேட்டவாறு "கைகாலை கழுவிவிட்டு சாப்பிட வாங்கோ" என அன்புடன் அழைத்தாள். மாறன் நம்ப முடியாதவனாகி" ஏது காசு என கேட்டவாறு தமிழ் மதியை நோக்க அவள் காதில் இருந்த மெல்லிய தங்கத் தோட்டிற்கு பதில் வேப்பங் குச்சி கண் சிமிட்டியது

**விசாகன்**
**பூநகரி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.எஸ்.வரதராஜன் B.A(Hons)
முன்னைநாள் விரிவுரையாளர்
பொருளியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்



# இலங்கைக் களத்தில்

## அமெரிக்க கழுகு - சீன ட்ராகன் - இந்திய யானை





இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான உரிமைப் போராட்டம் கடந்த 65 வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. இதில் ஏறத்தாழ 30 வருடங்கள் அகிம்சை வழியில் - ஜனநாயக வழிமுறைகளில் தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை தந்தை செல்வாவின் தலைமையில் நடாத்தினர். இவை யாவும் ஆயுத வழிமுறையிலேயே அடக்கப்பட்டன. 1980களின் முற்பகுதியில் தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறி, தமிழ் மக்களின் எதிர்காலத்தை கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு தந்தை செல்வா மறைந்தார்.

அதன் பின்னர் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் ஆயதப் போராட்டமாகப் பரிணமித் தது. 2009ல் அதுவும் முடிவிற்கு வந்தது. எனினும் 30 வருட ஜனநாயக வழிப் போராட்டம் சாதிக்க முடியாத ஒன்றை 30 வருட ஆயுதப் போரார்ட்டம் சாதித்தது. தமிழ் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சனையை சர்வதேசமயப்படுத்தியதுதான் அது. இன்று தமிழ் மக்களின் பிரச்சனையை சர்வதேசம்- மேற்குலகம் குறிப்பாக அமெரிக்கா கையாளத் தொடங்கி விட்டது. ஆனால் அது தமிழ் மக்களின் நலன் சார்ந்து தீர்மானங்கள் எதையும் எடுக்க மாட்டாது. மாறாக தனது பொருளாதார, அரசியல், இராணுவ நலன்கள் சார்ந்தே தீர்மானங்களை மேற்கொள்ளும். இலங்கை அரசாங்கம் தனது நலன் சார்ந்து - சிங்கள மக்களைத் திருப்திப் படுத்தக்கூடிய வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளும். இவ்விரண்டுக்கும் இடையில் தமிழ் மக்களின் தலைமைகள் எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ளப் போகின்றார்கள் எனத் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சனை அரசியற் பிரச்சனையாக இருந்தாலும்கூட சர்வதேசம் இதனை தமது பொருளாதார மற்றும் இராணுவ நலன் சார்ந்த பிரச்சனையாகவே பார்க்கின்றது. யுத்தத்திற்குப் பின்னர் அமெரிக்கா, இந்தியா, சீனா ஆகிய மூன்று நாடுகளின் போட்டிக்களமாக இலங்கை மாறிவிட்டது. தற்போதையநிலையில் சீனா இப்போட்டியில் முன்னிலை பெற்று விளங்குகின்றது. இலங்கை அரசாங்கம் நாட்டின் வளங்கள் அனைத்தையும் எதுவித நிபந்தனைகளுமின்றி சீனாவிற்கு வழங்கிவருகின்றது. வடக்கே யாழ்ப்பாணம் தொடக்கம் தெற்கே அம்பாந்தோட்டை வரை சீனாவின் கால் படாத இடம் கிடையாது. இன்று இலங்கையில் பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் சீனாவிற்கு பங்குண்டு.

யுத்தத்தின்பின் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது அமெரிக்காவிற்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. இன்று உலகில் அமெரிக்கா வகிக்கின்ற பொருளாதார முதன்மைக்கு சவால் விடுகின்ற நாடாக சீனா காணப்படுகின்றது. உலகில் அமெரிக்கா வகிக்கின்ற பொருளாதார முதன்மையை முறியடித்து முதன்மை நிலைக்கு வரக்கூடிய ஆற்றல் சீனாவிற்கு மட்டுமே உண்டு.


**சீனா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.**

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம்

சீனா
அமெரிக்கா

| | | |
|---|---|---|
| 2008 | 9.6 | -0.3 |
| 2009 | 9.2 | -3.1 |
| 2010 | 10.4 | 2.4 |
| 2011 | 9.3 | 1.8 |
| 2012 | 7.8 | 2.2 |
| 2013 | 8.0 | 1.9 |
| 2014 | 8.2 | 3.0 |
| 2018 | 8.5 | 2.9 |

எதிர்பார்க்கைகள்




World Economic Outlook April 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்வாறான வளர்ச்சி வீதம் தொடர்ந்து இருக்குமாயின் கொள்வனவு சக்திச் சமன்பாட்டின் படி கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியின் அடிப்படையில் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஐ.அமெரிக்காவின் பங்கை விட சீனாவின் பங்கு 2017ம் ஆண்டு கூடுதலாக இருக்கும்.

## உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு (சதவீதத்தில்)

| ஆண்டு | சீனா | ஐ.அமெ |
|---|---|---|
| 1980 | 2.19 | 24.61 |
| 1990 | 3.87 | 24.68 |
| 2000 | 7.13 | 25.53 |
| 2011 | 14.32 | 19.13 |
| 2017 | 18.31 | 17.74 |

எதிர்பார்க்கை

World Economic Outlook April 2012




இன்று உலகில் பொருளாதாரரீதியில் ஐ.அமெரிக்கா அதி மேலான சக்தி (Supper power) சீனா பெரிய சக்தி (Great power) ஆனால் மிக விரைவில் ஐ.அமெரிக்காவைப் பின் தள்ளி, சீனா அதி மேலான சக்தியாக வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2003ம் ஆண்டு கோல்ட்மன் சாக்ஸ் (Goldman Sachs) தனது ஆய்வில் 2050ம் ஆண்டளவில் உலகப் பொருளாதாரத்தில் முதலிடத்தை சீனா பெற்றுக்கொள்ளும் என்று எதிர்வு கூறியிருக்கின்றார். இந்நிலையில் சீனாவை பொருளாதாரரீதியில் எவ்வாறு கையாள்வது என்பதே இன்று ஐ.அமெரிக்காவிற்கு உள்ள பிரச்சனையாகும். இந்துமா சமுத்திரத்தில் பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச்சுற்றி சீனா மேற்கொண்டிருக்கும் முத்துமாலைத் திட்டம் ஐ.அமெரிக்காவிற்கு மிகப் பெரிய தலையிடியாகும். இந்த முத்துமாலையின் பதக்கமாக இலங்கை ஜொலிக்கின்றது. சீனச் செல்வாக்கை இலங்கையிலிருந்து அகற்றுதல் மூலமே இந்துமா சமுத்திரத்தில் சீனா கொண்டிருக்கும் ஆதிக்கத்தை குறைக்கமுடியும் என்பது ஐ.அமெரிக்காவின் எதிர்பார்ப்பு.

ஐ.அமெரிக்காவிற்கு காலத்திற்குக்காலம் இவ்வாறு பிரச்சனைகள் உருவாகுவதும் அதனை லாவகமாகக் கையாண்டு அதிலிருந்து மீள்வதும் அதற்குக் கைவந்த கலை. 1980கள் வரை ஐ.அமெரிக்காவிற்கு சிவப்பு ஆபத்து (Red Danger) - கம்யூனிச பயம் இருந்தது. சோவியத் யூனியனின் உடைவின்மூலம் அவ் ஆபத்து நீங்கியது. இதன் பின்பு பச்சை ஆபத்து (Green Danger) - இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றிய பயம் இருந்தது. சதாம் உசைன், கடாபி, ஒசாமா பின்லேடன் ஆகியோரின் மரணங்கள் மூலம் இவ் ஆபத்து ஒரளவு நீங்கியது. ஈரான் மட்டும் உறுத்தலாக உள்ளது. மூன்றாவதாக உருவாகியுள்ள மஞ்சள் ஆபத்து (Yellow Danger) - சீனா பற்றிய ஆபத்து தான் இன்று ஐ.அமெரிக்காவிற்கு மிகப்பெரிய பிரச்சனை. சீனாவை பொருளாதாரரீதியில் எவ்வாறு கையாள்வது என்ற விடயத்தின் அடிப்படையில்தான் தமிழர் பிரச்சனையை ஐ.அமெரிக்கா கையில் தூக்கியுள்ளது. தமிழர்களின் ஆயதப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவந்ததில் ஐ.அமெரிக்காவிற்கு நிறையப் பங்கு உண்டு. இலங்கையில் தனது முதலீடுகளுக்கான பாதுகாப்பும் சீனாவை இலங்கையிலிருந்து தூரத்தில் வைத்திருப்பதும் இதற்கான பின்னணியாக இருந்தது. ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் நிலைமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எதிர்மாறாக இருந்தது. இலங்கை சீனாவை நோக்கி மேலும் நெருங்கிச் செல்ல ஆரம்பித்தது. இலங்கையின் இத்தகைய நகர்வு ஐ.அமெரிக்காவை மட்டுமல்ல இந்தியாவையும் எரிச்சலைடையச் செய்தது.

இக்கட்டுரை எழுதப்பட்டுக்கொண்டிருக்கும்போது இலங்கை ஜனாதிபதி சீனாவில் இருக்கின்றார். இது அவரது ஏழாவது சீன விஜயமாகும். சீனாவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏழு தடவைகள் விஜயம் செய்ததன்மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நெருக்கம் வெளிக்காட்டப்பட்டுள்ளதாக சீன ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். கடந்த ஏழு ஆண்டுகளில் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி 37 திட்டங்களில் இலங்கையில் முதலீடு செய்துள்ளது. தற்போது கொழும்பு - யாழ் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், கொழும்பு - கண்டி - குரு நாகல் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், மாத்தறை - கதிர்காமம் அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், அத்தனகல, மினுவாங்கொட, குருநாகல் ஆகிய பகுதிகளில் நீர் விநியோகத் திட்டம், கண்டியில் அனைத்துலக மாநாட்டு மண்டபம் அமைத்தல், அனுராதபுரத்தில் கலையரங்கு ஒன்றை அமைத்தல், கொழும்பு மற்றும் ராகம மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்தல் என்பன புதிதாக சீனா இலங்கையில் மேற்கொள்ளப்போகும் திட்டங்களாகும். இதற்கும் மேலாக இலங்கைக்கு முதலாவது தொடர்பாடல் செய்மதியை வழங்குவதற்கான ஒப்பந் தத்தில் சீனப் பெருஞ்சுவர் கைத்தொழில் கூட்டுத்தாபனம் கைச்சாத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தமானது இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தில் அமைந்துள்ள இலங்கையில் சீனாவின் தலையீட்டை மேலும் விரிவாக்குவதற்கு உதவியாக அமையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் இந்தியா, அமெரிக்க நாடுகளுக்கு உவப்பானதாக அமையமாட்டாது என்பது வெளிப்படை.

இன்று இலங்கைக்குக் கடன் வழங்கும் நாடுகளில் முதலிடத்தில் இருப்பது சீனாவாகும். நீண்டகாலமாக முதலிடத்திலிருந்த ஜப்பானை இரண்டாம் இடத்திற்கு தள்ளிவிட்டு சீனா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. *2012*ம் ஆண்டு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய கடன் *48025* மில்.ரூபா. ஆனால் சீனா வழங்கிய கடன *65618* மில்.ரூபாவாகும்.

**சீனாவிற்கு செலுத்தவேண்டியுள்ள இலங்கையின் கடனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.**

| ஆண்டு | வெளிநின்ற கடன் (மில்.ரூபா) |
|---|---|
| 2001 | 3,219 |
| 2002 | 3,373 |
| 2003 | 3,115 |
| 2004 | 3,142 |
| 2005 | 3,604 |
| 2006 | 5,121 |
| 2007 | 22,668 |
| 2008 | 29,688 |
| 2009 | 46,641 |
| 2010 | 56,459 |
| 2011 | 59,497 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ம் ஆண்டு இறுதிவரை சீனாவுடனான வெளிநின்ற கடன் ஏறத்தாழ 3600மில்.ரூபா என்ற மட்டத்திலேயே காணப்பட்டது. ஆனால் 2006ம் ஆண்டிற்குப் பின்பு இத்தொகை வேகமாக அதிகரித்து வந்துள்ளதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. 2006ம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரே இந்த மாற்றம் ஏற்பட்டது என்பது யாவரும் அறிந்த உண்மை. பதவியேற்கும்போது 3600 மில்.ரூபாவாக இருந்த கடன் தொகை இன்று ஏறத்தாழ 60000 மில்.ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதிகளவில் இலங்கை சீனாவோடு நெருங்கி உறவாடினாலும்கூட இலங்கை தனது வெளிநாட்டு வருமானத்தை பெறுவதற்கு மேற்குலகத்தையே பெருமளவிற்கு சார்ந்து நிற்க வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கில் மேற்குலகிற்கும் கிழக்குலகிற்குமிடையில் ஒரு தெளிவான வேறுபாட்டினை அவதானிக்க முடியும். இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தை மேற்குலகம். ஆனால் பிரதான இறக்குமதிச் சந்தை கிழக்குலகம். இலங்கையின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் ஏறத்தாழ 20 சத வீதத்தை ஐ.அமெரிக்காவும் 34 சதவீதத்தை ஐரோப்பிய நாடுகளும் வழங்குகின்றன. இதன்படி இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்தில் அரைப் பங்கிற்கும் மேற்பட்ட தொகையினை இந்நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்கின்றது. ஆனால் இந்நாடுகளிலிருந்து இலங்கை தனது இறக்குமதிப் பெறுமதியில் 10 சதவீதத்தை மட்டுமே பெற்றுக் கொள்கின்றது. இதன்படி இந் நாடுகளுடனான வர்த்தகத்தில் இலங்கை மிகையை அனுபவிக்கின்றது. இந்நாடுகள் பற்றாக்குறையை அனுபவிக்கின்றன.

**இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கு 2011**

மில்.ஐ.அ.டொலர்

| நாடு | ஏற்றுமதிப் பெறுமதி | இறக்குமதிப் பெறுமதி | வர்த்தகப் பற்றாக்குறை / மிகை |
|---|---|---|---|
| ஐ.அமெரிக்கா | 2145 | 266 | 1879 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 3576 | 1856 | 1720 |
| சீனா | 103 | 2092 | -1989 |
| இந்தியா | 519 | 4431 | -3912 |
| ஈரான் | 180 | 1602 | -1422 |

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2011

**இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்கு 2011**

சதவீதத்தில்

| நாடு | ஏற்றுமதிப் பெறுமதியில் பங்கு | இறக்குமதிப் பெறுமதியில் பங்கு |
|---|---|---|
| ஐ.அமெரிக்கா | 20.3 | 1.3 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 33.8 | 9.2 |
| சீனா | 1.0 | 10.3 |
| இந்தியா | 4.9 | 21.9 |
| ஈரான் | 1.7 | 7.9 |

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2011

இதற்கு மாறாக இலங்கை தனது இறக்குமதிப் பெறுமதியில் ஏறத்தாழ 40 சதவீதமான இறக்குமதிகளை இந்தியா, சீனா, ஈரான் ஆகிய மூன்று நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள் கின்றது. இந்நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி யில் 8 சதவீதம் மட்டுமே. இதன்படி இந் நாடுகளுடனான வர்த்தகத்தில் இலங்கை பற்றாக் குறையை அனுபவிக்கின்றது. இந்நாடுகள் மிகையை அனுபவிக்கின்றன.

இலங்கையின் ஏற்றுமதி உழைப்பில் 40 சதவீதம் ஆடை ஏற்றுமதிகளிலிருந்து பெறப்படு கின்றது. இவ் ஏற்றுமதி உழைப்பில் 90சதவீதம் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து பெறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.அமெரிக்கா இலங்கை மீது முழுமையான ஒரு பொருளாதாரத் தடை விதிக்குமேயானால் இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்கினை இழக்கும். எனவே அமெரிக்கா இலங்கைப் பொருளாதாரத்தின்மீதான தனது பிடியை இறுக்கமாகவே வைத்துள்ளது. இலங்கை ஜனாதிபதி சீனாவுடனான தனது உறவினைப் பலப்படுத்துவதற்கு பல தடவைகள் சீனாவிற்கு விஜயம் செய்யலாம். இதன் மூலம் சீனா எங்கள் பக்கம் உள்ளது. நீங்கள் எங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் சீனா அனைத்து உதவிகளையும் எங்களுக்கு வழங்கும் என்ற செய்தியை மேற்குலகத்திற்கு குறிப்பாக அமெரிக்காவிற்கு உணர்த்துவதற்கு ஜனாதிபதியின் சீன விஜயங்கள் பயன்படலாம். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. இலங்கைக்கு சீனா முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். ஆனால் சீனாவிற்கு இலங்கை முக்கியம் அல்ல. அண்மையில் புதிதாகப் பதவியேற்ற சீன ஜனாதிபதி தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டாரேயொழிய இலங்கைக்கு அல்ல.

ஆடை ஏற்றுமதி 2011

| நாடு | ஏற்றுமதிப் பெறுமதி மில்.ஐ.அ.டொலர் | ஏற்றுமதிப் பெறுமதியில் பங்கு (%) |
|---|---|---|
| ஐரோப்பிய ஒன்றியம் | 2019 | 50.6 |
| ஐ.அமெரிக்கா | 1574 | 39.5 |
| ஏனைய நாடுகள் | 394 | 9.9 |
| மொத்தம் | 3987 | 100 |

இலங்கைக்காக இந்தியாவையோ அமெரிக்காவையோ சீனா பகைக்கத் தயாராக இல்லை. சீனாவின் ஏற்றுமதிப் பங்காளரில் முதலிடத்தில் இருப்பது ஐ.அமெரிக்காவாகும். சீனாவின் ஏற்றுமதிகளில் 17.7சதவீதமான ஏற்றுமதிகள் ஐ.அமெரிக்காவிற்கானது என்பது குறிப்பிடத்தக்கது. உலகில் பொருளாதாரரீதியில் அதி மேலான சக்தி (Supper power) என்ற நிலையைத் தக்க வைப்பதற்கு ஐ.அமெரிக்காவும், பெரிய சக்தி (Great power) என்ற நிலையிலிருந்து அதி மேலான சக்தி (Supper power) என்ற நிலையை அடைவதற்கு சீனாவும் அன்று போட்டி போடுகின்றன. அமெரிக்கப் போட்டியைச் சமாளிப்பதற்கு சீனா இந்தியாவை துணைக்கிழுக்கின்றது. அதே நேரத்தில் இலங்கையை ஒரு களமாகப் பயன்படுத்த சீனா முற்படுகின்றது. உண்மையில் இப்பொழுது அமெரிக்காவும் சீனாவும் தான் பொருளாதாரப் போரில் ஈடுபட்டுள்ளன. ஆனால் இதனை சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான போட்டியாகக் காட்டுவதற்கு அமெரிக்கா முற்படுகின்றது. BRICS அமைப்பினூடாக இந்தியாவும் சீனாவும் நெருங்கிவருவதனை அமெரிக்கா விரும்பவில்லை. இதனால் இன்று இந்து மாசமுத்திரத்தில் சீன மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சீன ட்ராகனுக்கும் இந்திய யானைக்குமிடையிலான போட்டியாக சித்தரிக்கவே மேற்குலகம் விரும்புகின்றது. சீனட்ராகனுக்கும் இந்திய யானைக்கும் அமெரிக்க கழுகிற்குமிடையில் பொருளாதாரப் போர் நடைபெறுகின்றது. இப்போரில் இலங்கைச் சிங்கம் களமாகப் பயன்படுத்தப்படுகின்றது. புலிகளின் அழிவு இதற்கு வாய்ப்பாகப் போய்விட்டது.

இலங்கைக் களத்தில் சீன ட்ராகன் இந்திய யானையை வீழ்த்துமா? அல்லது சீன ட்ராகனை இந்திய யானை தனது காலடியில் போட்டு மிதிக்குமா? அல்லது சீன ட்ராகனை தனியாகச் சமாளிக்க முடியாதநிலை ஏற்படும்போது சீன ட்ராகனை வீழ்த்துவதற்கு அமெரிக்க கழுகினை இந்திய யானை துணைக்கிழுக்குமா? இலங்கைச் சிங்கம் சீனட்ராகனோடு எவ்வளவு காலத்திற்கு நெருங்கிய உறவு வைத்திருக்கும்? ஆகிய வினாக்களுக்கான பதில்களிலேயே இலங்கைத் தமிழர் இனப் பிரச்சனைக்கான தீர்வும் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தென்னிலங்கையில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்கும் இடங்களில் ஒன்றாக கந்தரோடை விளங்குகிறது.அதற்குக் காரணம் அங்கு காணப்படும் தொல்பொருட் சின்னங்கள் ஆகும்.இவை பௌத்த மதத்துக்கு உரியன என்றும், அங்கு புராண ரஜமகா விகாரை காணப்படுகின்றது என்றும் அவர்கள் கருதுகின்றமையே அவர்களது வருகைக்கான பிரதான காரணமாகும்.

கந்தரோடை வரலாற்றுச் சின்னங்கள் தொடர்பில் மூவேறு கருத்துக்கள் உள்ளன. அவ்வகையில் வழுக்கியாற்றை ஆதாரமாகக் கொண்ட ஆதித் தமிழர்களின் குடியிருப்பாகக் கந்தரோடை காணப்பட்டது என ஒரு சாரார் வலியுறுத்துவர்.அதை வரலாற்று ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.அது கதிரமலை எனப்படும் தமிழ் இராச்சியம் நின்று நிலவிய இடம் என்று வரலாற்றறிஞர்கள் சிலர் வலியுறுத்தி உள்ளனர்.

உக்கிர சிங்க மன்னன் இந்தப் பிரதேசத்தை ஆண்டு வந்தான் எனவும், அவ்வேளை தீர்த்த யாத்திரைக்காக தென்னிந்தியாவிலிருந்து வந்த மாருதப்புரவீகவல்லியை வன்கவர்ந்து திருமணம் செய்து கொண்டான் எனவும், அரசி மாருதப்புரவீகவல்லியின் விருப்பத்துக்கு இணங்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டினான் எனவும் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாண இராச்சியம் நூல் குறிப்பிடுகின்றது.அவ்வேளை கந்தரோடையில் தமிழ்ப் பௌத்த மக்கள் வாழ்ந்தமையையும்,பௌத்த மடப் பள்ளிகள் இருந்தமையையும் சுட்டிக் காட்டும் யாழ்ப்பாண இராச்சியம் பௌத்த ஆதிக்கம் கருதி, உக்கிரசிங்கன் தனது தலைநகரை வல்லிபுரத்துக்கு மாற்றினான் என்றும் கூறுகிறது.கதிரமலை என்பதை அழுத்தும் விடயமாக கதிரமலைச் சிவன் கோவில் கந்தரோடைக்கு கிழக்காக சுன்னாகத்தில் இன்றும் உள்ளது.அந்தப் பிரதேசம் சற்று உயரமாக உள்ளமையால் கதிரமலை இராச்சியம் அங்கு இருந்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

● சு.ஸ்ரீகுமரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கந்தரோடை மறைந்து போகும் வரலாறு




லிங்கோற்பவர் எனப்படும் வீரசைவர்களைப் புதைத்த ஈமத்தாழிகள் கொண்ட இடமே கந்தரோடை என்று இன்னொரு சாரார் வலியுறுத்துவர். பௌத்தம் நிலவிய இடம் என்பது வேறு சாராரின் கருத்தாகும். உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் சோல்க் தமிழ்ப் பௌத் தம் நிலவிய இடமாகக் கந்தரோடை, வல்லிபுரம் பகுதிகளை அடையாளம் காண்கிறார்.

எவ்வாறெனினும் கந்தரோடை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம் என்பதை நிலை நிறுத்தும் வகையில் வழுக்கியாறு, மருதநிலம், ஆலய அரண்கள், குடியிருப்புக்கள் மத்தியில் இத்தொல் பொருட் சின்னங்கள் காணப்படுகின்றன.

இத்தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் காணி தியாகராசபிள்ளை சிவகுருநாதன் என்பவருக்குச் சொந்தமானதாக இருந்தது. இக்காணியின் பெயர் கயற்கண்ணி என்பதாகும். சித்தியார்வளவு என்றும் இது அழைக்கப்பட்டது. இங்கு பல நாணயங்கள் பிரதேச மக்களால் கண்டெடுக்கப்பட்டன. ஆயினும் கந்தரோடை தொல்பொருட்கள் தொடர்பாக முதன்முதல் ஆய்வுக் கருத்துக்களை வெளியிட்டவர் போல் பீரிஸ் ஆவார். அவர் அடிக்கடி கந்தரோடைக்கு வந்து தொல்பொருட்களைச் சேகரித்துச் சென்றார். கந்தரோடையின் தொன்மை பற்றி அவர் கருத்து வெளியிட்டு, அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆயினும் பிரதேச மக்கள் கந்தரோடை தொல்பொருட் சின்னங்கள் பற்றி அதிகம் அக்கறை காட்டவில்லை. முஸ்லிம் வியாபாரிகளே அதிகமாக அப்பகுதிக்கு வந்து நாணயங்கள், முத்துக்களைச் சேகரித்துச் சென்றனர். அவ்வேளை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியா சாலையில் ஆசிரியராக இருந்த பொன்னம்பலம்(ஆதவன்) தொல்பொருட்கள் வெளியே செல்லக் கூடாது என்பதை வலியுறுத்தி தனது மாணவர்கள் மூலம் தொல்பொருட்களைச் சேகரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அப்போதய யாழ்ப்பாண அரச அதிபராகவிருந்த பேணன் அபயசேகரவிற்குத் தமிழ் கற்பிக்கச் சென்ற அவர், தனது சேகரிப்பில் இருந்த தொல்பொருட்கள் அனைத்தையும் பேணன் அபயசேகரவிடமே கையளித்தார். அவர் அவ்வரும் பொருட்களை வித்தியலங்கார பல்கலைக்கழகத்துக்குக் கையளித்தாகத் தெரிவிக்கப்படுகிறது. வரலாற்று அக்கறையற்ற இச்செயலே புராண ரஜமகா விகாரை என்று பௌத்த மக்களை நம்ப வைக்கும் சான்றுகளானதோ?

போல் பீரிஸைத் தொடர்ந்து அமெரிக்காவின் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. சி. அப்புத்துரை என்பவருக்குச் சொந்தமான பொரிக்கன்புலம் என்ற காணியிலிருந்து எடுக்கப்பட்ட இப்பானை ஓட்டில் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன. இது கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியது என்று ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

போல் பீரிஸ் முதலானோர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக கயற்கண்ணி காணியை **1952**ஆம் ஆண்டு சி. சிவகுருநாதனிடமிருந்து தொல்பொருட் திணைக்களம் சுவீகரித்தது. அதனைத் தொடர்ந்து **1960,1962,1964** ஆம் ஆண்டுகளில் தொல்பொருட் திணைக்களத்தால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகள் யாவும் நில மட்டத்தில் இருந்து இரண்டு அடி ஆழத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வில் முருகைக் கற்பாறைகளிலான வட்ட வடிவ அத்திவாரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைச் சுற்றி பெரிய வட்ட வடிவிலான அத்திவாரமும் காணப்பட்டது. தொல்பொருட் திணைக்களம் மேலதிக ஆய்வுகளைச் செய்யாமலேயே தனது ஆய்வுகளை நிறுத்திக் கொண்டதுடன் கண்டுபிடிக்கப்பட்ட அத்திவாரங்களின் மேல் கற்களை நிரப்பி, உறுதியான கொங்கிறீட் இட்டு, தாதுகோப அமைப்புக்களை உருவாக்கியது. இன்று நாம் காண்பவை தொல்பொருட் திணைக்களத்தால் உருவாக்கப்பட்ட செயற்கையான அமைப்புத்தான்.

**1970**களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத் தொல்பொருட் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் வி. சிவசாமி, ஆ. சிவநேசச்செல்வன், அ. தற்பரானந்தன் முதலான பலர் அங்கம் வகித்த இக்கழகம் யாழ். பொது நூலகத்தில் பத்து தினங்கள் யாழ்ப்பாணத்தின் தொல்பொருட்கள் தொடர்பாக ஒரு கருத்தரங்கை நடத்தியது. இக்கழகம் தொல்பொருட் திணைக்களத்தின் செயற்பாடுகளைக் கேள்விக்கு உட்படுத்தியது.

அதுமட்டுமன்றி தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி. தர்மலிங்கம் நாடாளுமன்றத்தில் கந்தரோடை அகழ்வாய்வு தொடர்பாகக் குரல் கொடுத்தார். அப்போதய அரசமைப்பு விவகார அமைச்சராக விளங்கிய கொல்வின் ஆர்.டி. சில்வாவை விளித்து, " நீர் ஒரு வரலாற்றாசிரியர். சரியாக ஆய்வு செய்யாமல், உண்மை வரலாற்றினை ஆராயாமல் தாதுகோப அமைப்புக்களை நிறுவுவது தவறானது. அதை உடனடியாக நிறுத்தி மேலும் ஆய்வுகளைச் செய்ய வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். அதை ஏற்றுக் கொண்ட கொல்வின் ஆர்.டி. சில்வா கந்தரோடைக்கு விஜயம் செய்ததுடன் தொல்பொருட் திணைக்கள வேலைகளையும் நிறுத்துவித்தார். அதன் பின் தொல்பொருள் திணைக்களம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

எனினும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கலாநிதி இரகுபதி, கலாநிதி செ. கிருஸ்ணராஜா முதலானோர் இப்பகுதியில் கள ஆய்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர்.இவர்களது ஆய்வின் பயனாக கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.இதன் மூலம் பூர்வீகமாகத் தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்தமை ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.அத்துடன் பண்டைத் தமிழரின் தாழி அடக்கத்தை(ஈமத்தாழி) பறைசாற்றும் சான்றுகளும், இங்கும் வேறு பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன் இவற்றுள் ஒப்புமையும் காணப்பட்டுள்ளது. லக்ஸ்மி நாணயம்,உரோம நாணயம்,சீன நாணயம்,சேது நாணயம் முதலியவையும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன.இவை கந்தரோடை ஒரு வியாபார கேந்திரமாக இருந்ததையும் புலப்படுத்துகின்றது.

தற்போது இங்கு இராணுவ காவலரண் ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன் புத்தர் சிலையுடன் கூடிய வணக்கதலமும் நிறுவப்பட்டுள்ளது.கந்தரோடை புராண ரஜமகா விகாரை எனப் பெயரிடப்பட்டுள்ளது.தினமும் நூற்றுக் கணக்கான பௌத்த மக்கள் இவ்விடத்தைப் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

எவ்வாறாயினும் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலமே கந்தரோடை தொடர்பான வரலாற்று மர்மங்கள் விடுபடும்.அதன் தொன்மையும் சிறப்பும் வெளிப்படுத்தப்படும்.




ஒரு அழகான கல்லூரி மாணவனும், அவனது விரிவுரையாளரும் ரயிலில் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரில் ஒரு அழகான பெண்ணும், அவளது பாட்டியும் அமர்ந்திருந்தனர். கொஞ்ச நேரத்திலேயே மாணவனுக்கும், அந்த யுவதிக்கும் இடையில் பார்வை பரிமாற்றங்கள் தொடங்கியது. சிறிது நேரத்தில் ரயில் ஒரு குகைப் பாதையில் நுழைந்தது. உள்ளே மையிருட்டு. அப்பொழுது ஒரு முத்தமிடும் சத்தம் கேட்டது. தொடர்ந்து ஒரு அறை விழும் சத்தமும் கேட்டது.

ரயில் சிறிது நேரத்தில் குகைப் பாதையிலிருந்து வெளி வந்த பொழுது, நால்வரும் அவரவரிடத்தில் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

பாட்டி மனதிற்குள் நினைத்தார், "அந்த பையனுக்கு ஆனாலும் ரொம்ப திமிரு. என் பேத்திக்கு முத்தம் கொடுக்கிறானே படவா! ஆனாலும் என் பேத்தி பரவாயில்லை. உடனே அவனை அறைஞ்சுட்டாள்."

விரிவுரையாளர் மனதிற்குள், "இந்த பயலுக்கு இப்படி முத்தம் கொடுக்கற அளவுக்கு தைரியம் இருக்கும்னு தோன்றலையே!! ஆனாலும் அதற்காக அந்த பெண் என்னை அறைஞ்சிருக்க வேண்டாம்!!!"

அந்த பெண், "அந்த பையன் முத்தம் கொடுத்தத நினைச்சா சந்தோஷமா இருக்கு. அனா பாவம்! நம்ம பாட்டி அவனை அறைஞ்சுட்டாங்களே!!"

மாணவன் என்ன நினைச்சான் தெரியுமா? "வாழ்க்கைல இந்த மாதிரி ஒரு நிமிஷம் ஒருத்தனுக்கு கிடைக்கறதுக்கு கொடுத்து வச்சிருக்கனுமே. பின்னே சும்மாவா? ஒரே நேரத்துல ஒரு அழகான பெண்ணுக்கு முத்தம் கொடுத்துவிட்டு, தன்னோட ஆசிரியரை அறையும் வாய்ப்பும் கிடைக்குமா என்ன?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை பற்றி தற்போது பரவலாக விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன.அந்த வகையில் இறுதியாக காந்தியின் சபர்மதி ஆச்சிரமம் பற்றியும் அங்கு இளம் பெண்கள் எவ்வாறு தூங்க நிர்பந்திக்கப்பட்டனர் என்பது பற்றியும் விலாவரியாக ஓர் அமெரிக்க இணையம் சொல்கின்றது. ஆனால் இச் செய்திகள் காங்கிரஸ் செல்வாக்குடன் இருக்கும் வரை வெளிவரத் தடைகள் உள்ளன.அந்த வகையில் மகாத்மா என்றும் தேசத்தந்தை என்றும் புகழப்படும் காந்தியை விட இந்தியாவை அதிகம் நேசித்தவர் தான் நாதுராம் விநாயக் கோட்சே.

கோட்சேயை மேற்கோள் காட்டியோ அல்லது ஆதரவாகவோ கருத்து சொன்னாலோ ஒரு எதிரியை போல் பார்க்கப்படுவேன் என்பது எனக்கு தெரிகிறது ஹிட்லரை பற்றி எழுதியதற்கே கடும் விமர்சனங்கள் இப்ப கோட்சேயா கலிங்கம் கெட்டவர்களாக சித்தரிக்கப்பட்டவர்களை நல்லவர்களாக காட்ட முயற்சிக்கின்றதா? என நீங்கள் நினைப்பது புரிகின்றது. அனால் இவர்கள் கெட்டவர்களா? வென்றவர்களால் எழுதப்பட்டதே இவர்கள் பற்றிய வரலாறு இன்னும் பத்து ஆண்டுகள் சென்றால் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் கூட தமிழின விரோதியாக எழுதப்படலாம். அதற்கான ஆயத்தங்கள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் அதனை அலசி ஆராய்ந்தால் அடுத்த கலிங்கம் சிலவேளை வராது. சரி விடயத்திற்கு வருவோம்.



உலகம் முழுவதும் உத்தமராய் போற்றி வணங்கப்பட்ட ஒரு வயோதிகரை சிறிதும் ஈவு இரக்கமின்றி துடிக்க துடிக்க சுட்டு கொலை செய்த ஒரு மனிதனிடம் அப்படி என்ன நியாயம் இருந்துவிட முடியும் ..? என்ற மனோபாவத்தோடு நீங்களும் இருந்தால் படித்து பாருங்கள்


டெல்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில், மகாத்மா காந்தி கொலை வழக்கு விசாரணை நடந்தது. 1948 நவம்பர் 8ஆந்தேதி கோட்சே வாக்கு மூலம் கொடுத்தார். வாக்குமூலம், ஆங்கிலத்தில் மொத்தம் 92 பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது. மொத்தம் ஐந்து மணி நேரம் நின்று கொண்டே வாக்குமூலத்தைகோட்சே படித்தார். வாக்கு மூலத்தில் கோட்சே கூறியிருந்ததாவது:-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோட்சே





யுள்ள பிராமணக் குடும்பத்தில் நான் பிறந்தேன். இந்துவாகப் பிறந்ததில் பெருமைப்படுகிறேன். நான் வளர வளர என் மதத்தின் மீது எனக்கு மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது. ஆனால் எனக்கு எவ்வித மூட நம்பிக்கையும் ஏற்படவில்லை. தீண்டாமை ஒழியவும், சாதி ஒழியவும் பாடு பட்டேன். எல்லா இந்துக்களையும் சமமாக நடத்த வேண்டும், அவர்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கக் கூடாது என்று வற்புறுத்தி வந்துள்ளேன். சுவாமி விவேகானந்தர், திலகர், கோகலே, தாதாபாய் நவ்ரோஜி போன்றோர் எழுதிய நூல்களை படித்திருக்கிறேன்.

இந்தியாவின் வரலாற்றைப் படித்திருக்கிறேன். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ரஷியா போன்ற நாடுகளின் வரலாறுகளையும் படித்திருக்கிறேன். மகாத்மா காந்தி எழுதிய நூல்களையும், வீரசவர்க்கார் எழுதிய நூல்களையும் ஆழமாகப் படித்திருக்கிறேன். அவர்கள் பேச்சையும் நான் கேட்டிருக்கிறேன். என்னுடைய எண்ணமும், செயலும் இயங்க அவை எனக்கு உறுதுணையாக இருந்தன. இவைகளைப் படித்ததால் இந்து மதத்தில் நம்பிக்கையும், அழுத்தமான பிடிப்பும் ஏற்பட்டன. இந்து சமயத்திற்கும், இந்துக்களுக்கும் தொண்டு செய்வதே முதல் கடமை என்று எண்ணினேன். முப்பது கோடி இந்துக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். மனித இனத்தின் ஐந்தில் ஒரு பங்கு இந்துக்களின் மத சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கடமை உணர்வு ஏற்பட்டது.

1946ல் முகமதியர்களின் கொடுமை சொல்லொணாத துயரத்தைத் தந்தது. அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. நவகாளியில் நடந்த நிகழ்ச்சிகள் எங்கள் ரத்தத்தைக் கொதிப்படையச் செய்தன. அத்தகைய கொடுமைகள் புரிந்த முஸ்லிம்களை மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்தார். அதுமட்டுமல்ல டெல்லியில் ஒரு இந்துக் கோவிலில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் "குர்ஆன்" வாசகங்களைப் படிக்கச் செய்தார்.

முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் மசூதியில் பகவத் கீதையை மகாத்மா காந்தியால் படிக்க வைக்க முடியுமா? 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆந்தேதி விளக்குகள் அலங்காரத்துடன் நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட அதே நாளில் பஞ்சாபில் இந்துக்கள் உடைமைகளை முஸ்லிம்கள் தீக்கு இரையாக்கினார்கள். இந்துக்களின் ரத்தம், பஞ்சாப் ஆற்று நீரில் கலந்தோடியது.

11 கோடி மக்கள் வீடு இழந்தனர். இவ்வளவு நடந்தும் மகாத்மா காந்தி, "முகமதியர்களின் செயலில் ஒரு களங்கமுமில்லை" என்று பரிந்து பேசினார். என் ரத்தம் கொதித்தது. இனிமேல் நான் பொறுமையாக இருக்க முடியாத சூழ்நிலை உருவானது

காந்தியடிகளை கடுமையான வார்த்தைகளால் நான் தாக்க விரும்பவில்லை. அவருடைய கொள்கையும், மார்க்கத்தையும் முழுவதாக நிராகரிப்பதாகச் சொல்ல விரும்பவில்லை. பிரிட்டிஷ்காரர்கள், நம்மிடையே பிரிவினையை உண்டாக்கி, சுகமாக நம் நாட்டை ஆண்டு வந்தபோது, மகாத்மா காந்தி அதை எதிர்த்துப் போராடி பெரும் வெற்றியை நமக்குத் தந்தவர் என்பதை நான் மறுக்கவில்லை அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தியா பிரிக்கப்படுவதற்குக் காரணமாகவும், துணையாகவும் இருந்தவர் அவர். அதனால் அவர் இன்னும் நாட்டில் இருந்தால், இந்தியாவிற்குத் துன்பமும், இழப்பும் ஏற்படும்.

நல்லதோ, கெட்டதோ அவர் எடுக்கும் முடிவினையே இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பிடிவாதம் அவரிடம் காணப்பட்டது. இந்தியா அவருடைய தலைமையை நாடினால் அது நம் நாட்டை எங்கேயோ கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அவரே இங்கு உள்ள எல்லாவற்றையும் இயக்குபவர் ஒரு நீதிபதி என்றும் கூறலாம். "சத்தியாக் கிரகம்" என்றும் அழியாது என்பது அவர் அறிந்த சூத்திரம். காந்திஜியே தன் செயல்களுக்குத் தாமே வழக்கறிஞரும், நீதிபதியும் எனலாம். அவரது அரசியல், பகுத்தறிவு இல்லாதது எனப் பெரும்பாலானோர் நினைத்தனர்.



அவர்கள் காங்கிரசில் இருந்து வெளியேற வேண்டும் அல்லது அவர்களது அறிவுடைமயைக் காந்தியடிகளின் காலடியில் சமர்ப்பித்துவிட்டு சரண் அடைய வேண்டும் பிறகு அவர் விரும்பியபடி செயல்புரிய விடவேண்டும். அவர் கண்டதோ, தோல்வி மேல் தோல்வி அழிவு மேல் அழிவு. 33 வருடம் அரசியல் வாழ்வில் அவருடைய அரசியல் வெற்றி என்று எதையும் கூறமுடியாது. காந்தி வழி நடந்தால் நாம் அழிவைத்தான் சந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டியிருக்கும். கைராட்டை, அகிம்சை, உண்மை எனக் கூறிக்கொண்டு புரட்சி கரமான கருத்துக்கும் எதிராக இருப்பார். 34 வருடம் கழிந்த பிறகு கை ராட்டையைத்தான் அவர் தந்தார்.

ஜின்னாவின் இரும்புப்பிடி, எக்கு உள்ளத்தின் முன் காந்திஜியின் ஆத்ம சக்தி, அகிம்சைக் கொள்கை அனைத்தும் தவிடு பொடியாகி விட்டன. ஜின்னாவிடம் தம் கொள்கை ஒருக்காலும் வெற்றி பெறாது என்று தெரிந்திருந்தும் அவர் கொள்கையை மாற்றிக் கொள்ளாமலேயே இருந்தார்

தம் தோல்வியையும் அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. மற்ற மேதைகள் ஜின்னாவுடன் பேசி அவரை முறியடிக்கவும் வழிவிடவில்லை. இமயமலைப் போன்ற பெரிய தவறுகளைச் செய்த வண்ணம் இருந்தார். நாட்டைப் பிளந்து துண்டு துண்டாக்கியவரைத் "தெய்வம்" என மற்றவர் மதித்தாலும் என் உள்ளம் ஏனோ அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது, அவர் மீது கோபம்தான் வருகிறது.

காந்தியைக் கொன்றால் என் உயிரும் போய்விடும் என்பதை அறிவேன். சிறிதும் சந்தேகம் இல்லாமல் என் எதிர்காலம் பாழாய்ப்போவது உறுதி. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலிருந்தும் அட்டூழியத்திலிருந்தும் இந்தியா விடுதலையடையும் என்பது என்னவோ உறுதியாகும். மக்கள் என்னை "முட்டாள்" என்று அழைக்கலாம். அறிவில்லாமல் அண்ணல் காந்தியடிகளைக் கொன்றதாகக் கூறலாம். நம் இந்தியா ஒரு பலமுள்ள நாடாகவும், சுதந்திர நாடாகவும் இருக்கவேண்டும் என்பதே என் விருப்பம்.

நம் நாடு வல்லரசாகத் திகழவேண்டுமானால், காந்தியடிகளின் கொள்கையை நாம் கைவிடவேண்டும். அவர் உயிரோடிருந்தால் நாம் அவர் கொள்கைகளிலிருந்து மாறுபட்டுச் செயல்பட முடியாது. நான் இந்த விஷயத்தை நன்கு அலசி ஆராய்ந்த பிறகே அவரைக் கொல்ல வேண்டும் என்று முடிவு எடுத்தேன். ஆனால் நான் அதுபற்றி யாரிடமும் பேசவில்லை. எந்த வகையான யோசனையையும் எவரும் சொல்லவில்லை.

பிர்லா மாளிகையில் பிரார்த்தனை மைதானத்தில் 30-01-1948-ல் மகாத்மா காந்தியைச் சுட என் இரு கைகளுக்கும் வலிமையை நான் வரவழைத்துக்கொண்டேன். இனி நான் எதையும் சொல்வதற்கில்லை. நாட்டின் நலனிற்காகத் தியாகம் செய்வது பாவம் எனக் கருதினால் நான் பாவம் செய்தவனாவேன். அது கவுரவம் என்றால் அந்த கவுரவம் எனக்கு வரட்டும்.

நேதாஜி விடுதலைப்போரில், வன்முறையை ஆதரிப்பவர்களை மட்டும் காந்திஜி எதிர்த்தார் என்பதில்லை. அவருடைய அரசியல் கருத்துக்கு எதிரான கருத்துக்கள் உடையவர்களையும் வெறுத்தார். அவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது அவருக்கு இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்புக்கு சுபாஷ் சந்திரபோஸ் ஓர் எடுத்துக்காட்டு. காங்கிரசில் இருந்து சுபாஷ் சந்திரபோஸ் தூக்கி எறியப்படும் வரை, காந்திஜியின் வன்மம் முற்றிலும் அகலவில்லை.

சுபாஷ் சந்திரபோஸ் 6 ஆண்டுகள் நாடு கடத்தப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டதை எதிர்த்து எனக்குத் தெரிந்தவரை காந்திஜி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. மற்ற எந்த தலைவர்களையும் விட நேதாஜியை மக்கள் விரும்பினர். 1945இல் ஜப்பானியர் தோல்விக்குப்பிறகு சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவுக்குள் நுழைந்திருந்தால், இந்திய மக்கள் ஒட்டுமொத்தமாக அவரை வரவேற்று இருப்பார்கள். ஆனால் காந்தியின் அதிர்ஷ்டம் சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவுக்கு வெளியில் இறந்துவிட்டார்.

முஸ்லிம்கள் மீது காந்திஜி அதிகமான மோகத்தை வளர்த்துக்கொண்டார். பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக ஓடிவந்த இந்துக்கள் மீது இரக்கப்பட்டு ஆறுதலாக ஒரு வார்த்தைகூட பேசவில்லை. மனிதாபிமானம் பற்றி அவருக்கு ஒரு கண்தான் இருந்தது. அது முஸ்லிம் மனிதாபிமானம். காந்திஜிக்கும், எனக்கும் இடையே தனிப்பட்ட முறையில் எவ்வித பகையும் இருந்தது இல்லை. காந்திஜி மீது நான் இந்த தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளக் காரணம், நம் நாட்டின் மீது நான் கொண்டிருந்த பக்திதாயே தவிர வேறு ஒன்றும் இல்லை. பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகாவது, பாகிஸ்தானில் வாழும் இந்துக்களின் நலனைக்காக்க இந்த காந்தீய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால், என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியும். ஆனால், விடியும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் படுகொலை செய்யப்பட்ட செய்தியைக் கொண்டு வந்தது.

15 ஆயிரம் சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர். அந்த இந்துப்பெண்கள் சந்தைகளில் ஆடுமாடுகள் விற்கப்படுவதுபோல விற்கப்பட்டனர். இதனால் இந்துக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியாவை நோக்கி ஓடிவந்தனர். இந்தியாவை நோக்கி வந்த இந்திய அகதிகள் கூட்டம், நாற்பது மைல் நீளத்துக்கு இருந்தது. இந்தக் கொடிய நிகழ்ச்சிக்கு எதிராக இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அவர்களுக்கு விமானத் தில் இருந்து ரொட்டித் துண்டுகள் போடப்பட்டன. அவ்வளவுதான். "தேசத்தந்தை" என்று காந்தி அழைக்கப்படுகிறார். அது உண்மையானால் அவர் ஒரு தந்தைக்குரிய கடமையிலிருந்து தவறிவிட்டார். பிரிவினைக்கு (பாகிஸ்தான் அமைப்புக்கு) சம்மதம் தெரிவித்ததன் மூலம் இந்த தேசத்துக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்.



பிரிவினைக்கு காந்திஜி சம்மதித்ததால் அவர் இந்தியாவின் தேசத்தந்தை அல்ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாகிஸ்தானின் தேசத்தந்தை என்று நிரூபித்து விட்டார். பிரிக்கக்கூடாத பாரதம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன் ஒரு பகுதியில் மதவாத அரசு நிறுவப்பட்டது. இதனால் பட்டப்பகலில் சுமார் 400 பேர் கூடியிருந்த கூட்டத்தில் காந்திஜியை நான் சுட்டேன். அது உண்மை.

சுட்ட பிறகு ஓடுவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. தப்பி ஓடும் எண்ணமும் எனக்கு இல்லை. என்னை சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் முயலவில்லை. கொலை பற்றி நீதிமன்றத்தில் என் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்கவே விரும்பினேன். மரியாதைக்குரிய நீதிமன்றம் எனக்கு எந்த தண்டனையையும் விதிக்குமாறு கட்டளையிடலாம். என் மீது கருணை காட்ட வேண்டும் என்றும் நான் கேட்கவில்லை.

பிறர் என் சார்பாக கருணை வேண்டுவதையும் நான் விரும்பவில்லை. "கொலைக்கு நானே பொறுப்பு" என்னோடு பலர் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறார்கள். கொலைக்கு சதி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நான் முன்பே கூறியபடி என் செயலுக்கு கூட்டாளிகள் யாரும் கிடையாது. என் செயலுக்கு நானே முழுப்பொறுப்பு. அவர்களை என்னோடு குற்றம் சாட்டி இருக்காவிட்டால் எனக்காக எந்த எதிர்வாதமும் செய்திருக்கமாட்டேன். வீரசவர்க்காரின் தூண்டுதலில் நான் செயல்பட்டேன் என்று கூறுவதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். அது என் அறிவுத்திறனுக்கு ஏற்படுத்தும் அவமதிப்பாகக் கருதுகிறேன்.

1948 ஜனவரி 17ஆந்தேதி சவர்க்காரை பார்த்தோம் என்றும் அவர் "வெற்றியோடு திரும்புங்கள்" என்றும் வாழ்த்தி வழியனுப்பினார் என்று கூறுவதையும் மறுக்கிறேன். இந்து மதத்தை அழிக்க முயலும் சக்தியை ஒழித்துவிட்டேன் என்ற மன நிறைவு எனக்கு ஏற்பட்டுள்ளது. மானிட வர்க்கத்தின் நலனுக்காகவே இந்தச் செயலை செய்தேன். இந்தச் செயல் முற்றிலும் இந்து தர்மத்தையும், பகவத் கீதையையும் அடிப்படையாகக் கொண்டதுதான். நம் நாடு "இந்துஸ்தான்" என்ற பெயரில் இனி அழைக்கப்படட்டும். இந்தியா மீண்டும் ஒரே நாடாக வேண்டும். இந்திய வரலாற்றை எவ்வித பாரபட்சமும் இன்றி நேர்மையாக எழுதக்கூடிய வரலாற்று ஆசிரியர்கள் எதிர்காலத்தில் உருவானால், அவர்கள் என் செயலை மிகச்சரியாக ஆராய்ந்து, அதிலுள்ள உண்மையை உணர்ந்து, உலகறியச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது." இவ்வாறு கோட்சே கூறினான்

ஆனால் இன்றுவரை இவ்வாறான வரலாற்று ஆசிரியர்கள் தோற்றம் பெற்று இந்திய வரலாற்றை எழுதாது போனது கோட்சேயின் துர்பாக்கியமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகில் நடக்கா

# தோள் சீலை

**நீங்கள்** பல போராட்டங்கள் நடாத்தி இருக்கின்றீர்கள்,பல போராட்டங்கள் பற்றி அறிந்து இருக்கின்றீர்கள்.ஆனால் தோள் சீலைப்போராட்டம் பற்றி அறிந்து இருக்கின்றீர் களா?இது என்ன தோள் சீலைப் போராட்டம் என்கின்றீர்களா? ஆம் இது பெண்கள் தங்கள் மார்பை மறைத்து தோளுக்கு சீலை அணிய நடாத்திய போராட்டம் ஆனால் இன்று அமெரிக்காவில் பெண்கள் தங்கள் மார்பை மறைத்து ஆடை அணியாமல் செல்ல நீதிமன்றத்தை நாடி வெற்றி பெற்றிருக்கின்றனர். வைக்கம் போராட்டத்திற்கு முன்பாக தீண்டாமையை எதிர்த்து திருவனந்தபுரம் சமஸ்தானத்திற்கு எதிராக நடந்த மிகப்பெரிய பாட்டாளி மக்கள் போராட்டமே தோள்சீலை ப்போராட்டம். தீண்டாமை தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டது ஆனால் காணாமை என்பதும் இருந்துள்ளது(உலகில் எந்த மூளையிலும் நடக்காத கொடுமை). சாணாரை பார்த்தலே தீட்டு என்று வாழ்ந்த காலம். மிக அதிக தூரமில்லை. இது நடந்தது 19ஆம் நூற்றாண்டு களில். திருவனந்தபுரம் சமஸ்தானம் சட்டமே இயற்றியது இந்த பாகுபாடு களை வைத்து.யார் இந்த சாணர்கள், இவர்களை இந்த பெயர் சொல்லிக்கூப்பிடக்கூடாது என்று பெயரை கூட மாற்றிவிட்டனர் நாடார்கள் என்று. ஆனால் இவர்களின் பெயர் சான்றோர் நாடாள்வர் என்பதே. திருத்துறை பூண்டி வடகாடு கோயிலில் உள்ள கல்வெட்டில் இவர்களை நாடாள்வான் என்று குறிப்பிடுகிறது, இது 12ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு. தூத்துகுடியில் சாத்தான்குளம் கல்வெட்டும் நாடாள்வன் என்றே



உருக்கும் உண்மை

# ...ந்த மூளையிலும் ...ாத கொடுமை



# ...ப் போராட்டம்




**இன்றும் இலங்கையில் கோயிலுக்குச் செல்லும் போது மேற் சட்டையைக் கழற்ற வேண்டும் என்று வழக்கம் இருக்கின்றது**
**சாமிக்கும் சட்டைக்கும் சம்பந்தமே இல்லை.**
**இது அடக்கு முறையின் ஓர் வடிவமே.**
**ஆனால் இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் சட்டையைக் கழற்றி விட்டு கம்பீரமாகச் செல்கிறார்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறது இந்த கல்வெட்டு கி.பி. **1644**ம் ஆண்டு கல்வெட்டு. இப்படி சான்றோர் நாடாள் வான் என்ற குறிப்பிடப் பட்ட இனம். சான்றோர் என்று அழைக்கப்பட்டு அதன் பிறகு சாண்றார், சாணார் என்று மருவி வந்ததை பல அறிஞர்கள் சுட்டிகாட்டியுள்ளனர். இப்படி வாழ்ந்த மக்களையே அதாவது நாடாண்ட ஒரு பரம்பரையையே பார்த்தலே தீட்டு என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.



மேற்குத் தொடர்ச்சி மலையை மையமாகக் கொண்டு இயற்கை வளங்களை அதிகமாகக் கொண்ட மாநிலம் கேரளா மற்றும் முன்னாள் சென்னை மாகாணம். இங்கு விண்ணை முட்டும் அளவுக்கு வளர்ந்த ரப்பர் மரங்கள் நிறைந்த தோட்டங்கள், மிகப் பெரிய கனிகளைத் தரும் பலா மரங்கள், வாழைத் தோட்டங்கள், தென்னை மரங்கள், பனை மரங்கள், மிளகு, காபி, தேயிலைச் செடிகளின் அணிவகுப்புகள்... என்று, காணும் திசையெங்கும் பசுமையின் பாய் விரிப்பு. வருடத்தின் எல்லா நாட்களும் சலசலத்துக் கொண்டு ஓடும் நீரோடைகள், இறைச்சலுடன் பாயும் ஆறுகள், வெள்ளியை உருக்கிக் கொட்டுவது போன்ற நீர்வீழ்ச்சிகள். இது கேரளத்தின் அடையா ளங்கள்.

இந்தக் கேரள மாநிலத்தின் தென்பகுதிகளையும், இன்றைய தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தையும் உள்ளடக்கி இருந்த ஒரு சமஸ்தானம்தான் திருவிதாங்கூர். திருவனந்தபுரம் இவர்களது தலைநகரமாக இருந்தது..

வழக்கமாகத் திருவிதாங்கூரில் உயர்ந்த அந்தஸ் துடையவர்களின் முன்னிலையில் தாழ்ந்த அந்தஸ்து டையவர்கள் மரியாதையின் அடையாளமாகத் தங்கள் மார்பைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவது வழக்கம். இதன் தொடர்ச்சி தான் இன்றும் இலங்கையில் கோயிலுக்குச் செல்லும் போது மேற் சட்டையைக் கழற்ற வேண்டும் என்பது.சாமிக்கும் சட்டைக்கும் சம்பந்தமே இல்லை.இது அடக்கு முறையின் ஓர் வடிவமே.ஆனால் இதைப் புரிந்து கொள்ளாத மூட ஜனங்கள் சட்டையைக் கழற்றி விட்டு கம்பீரமாகச் செல்கிறார்கள். இந்தியாவில் இராஜாராம் மோகன்ராய்,தயானந்தர்,விவேகானந்தர் போன்றோர் தோன்றி மூடத்தனங்களை ஓரளவு களைந்தனர்.சட்டமும் மேற்சட்டை அணிய அங்கீகாரம் வழங்கியது. இதனால் இன்று கோயில் எனச் சிறப்பிக்கப்படும் சிதம்பரத்திற்கே மேற்ச் சட்டையுடன் போகலாம்.ஆனால் யாழ்ப்பாணத்து கோயில்களுக்கு நாம் எப்படிப் போகின்றோம்? சரி விடயத்திற்கு வருவோம் சாதி வரிசையின் நீண்ட படிகளில், உதாரணத்துக்கு நாயர்கள், நம்பூதிரி பிராமணர்களின் முன்னிலையில் தங்கள் மார்பைத் திறந்து போட்டார்கள். பிராமணர்களோ தெய்வங்களின் முன்னிலையில் தங்கள் மார்பைத் திறந்து போட்டார்கள். இந்த வழக்கத்தின்படி மற்ற தாழ்ந்த சாதிகளைப் போல நாடார்களும் எந்த நேரத்திலும் தங்கள் மார்பை மூடுவதினின்றும் தடுக்கப்பட்டார்கள். நாடார் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய உடை அரையில் முழங்கால் வரை ஒரு முரட்டுத் துணியைச் சுற்றிக் கொள்ளுவதாகும் (ஹாட்கிரேவ் 59, தெற்கிலிருந்து என்ற நூலில்) திருவிதாங்கூர் சமஸ்தானத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட 18 ஜாதியினர் மாத்திரமே இந்தக் கொடுமையை அனுபவித்தனர். இந்த 18 ஜாதி பெண்கள் மேலாடை அணியாமல் மார்பகத்தை திறந்து போடுவதுதான் அவர்கள் தங்களுக்கு தரும் மரியாதை என்று கருதினர், அங்கே வாழ்ந்த உயர் ஜாதியினர்.

பிராமணர்களிலேயே உயர்ந்தவர்களாக கருதப்பட்ட நம்பூதிரிகளின் ஜாதிய ஆட்சியே திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடந்தது. அவர்களும், நாயர்களும், சேர்ந்து கொண்டு கொடுங் கோலன்களுக்கு இணையாக ஜாதிய வெறியில் ஆட்டம் போட்டனர். அவர்களால் தாழ்த்தப்பட்டவர்களாக அறிவிக்கப்பட்டோர் பட்டியலில் 18 ஜாதிகள் இடம் பெற்றன. சாணார் (நாடார்), பரவர், மூக்குவர், புலையர் உள்ளிட்ட ஜாதியினர் அதில் அடங்குவர்.

"நாங்கள் தோளில் சீலை அணிய உரிமை வேண்டும்..." என்று 18 ஜாதியினரும் போராடத் துவங்க... பல ஆண்டுகளுக்கு பிறகுதான் அதில் வெற்றி கிடைத் தது. இந்த வெற்றிக்காக ரத்தம் சிந்திய, மானத்தை தியாகம் செய்த உயிர்கள் ஏராளம்... ஏராளம்...!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்ட பட்டியலில் இடம்பெற்ற ஜாதியைச் சேர்ந்த பெண்கள்தான் இந்த கொடுமைகளை அனுபவித்தனர். தாழக் கிடப்பாரைக் கைதூக்கி விடக் காலம் இருபெரும் சக்திகளை உருவாக்கித் தந்தது. ஒன்று சீர்த்திருத்தக் கிறிஸ்தவம். மற்றது, வைகுண்ட சாமியின் தோற்றமும் தொண்டும்.

1855இல் திருவிதாங்கூர் மன்னர் ஆயில்யம் திருநாள் வெளியிட்ட அரசு ஆவணம் ஒன்றில், நாயர் பெண்கள் மேலாடையை அணியக்கூடாது. நாஞ்சில் நாட்டை உள்ளடக்கி ஆட்சி செய்த திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர்களின் கண்டிப்பான உத்தரவு இது. "சமூகத்தில் பெரும் மரியாதைக்குரிய ஒரு மனிதரிடம் ஒரு பெண் தனது மார்பை திறந்து காட்டுவது என்பது, அந்த நபருக்கு சமூகம் அளிக்கும் மரியாதையாகவே கருதப்பட்டது" என்கிறார், "திருவிதாங்கூரின் இயல்பு வாழ்க்கை" என்ற நூலை எழுதிய ஆங்கிலேயரான சாமுவேல் மேட்டீர். அதை மீறி மேலாடை அணிந்தால் கொடுமையான தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். அதற்குப் பயந்தே, மேலாடை இன்றி நடமாடினர், யாழ்ப்பாணத்திலும் இம் முறைமை இருந்தது.ஆனால் சான்றுகள் போதுமானதாக இல்லை. ஆனாலும் ரவிக்கை அணிந்து தண்ணீர் அள்ளியமைக்காக ரவிக்கையை கிழித்தமை பற்றிய கதைகள் ஏராளம் உலாவுகின்றன. எழுத்தாளர் டானியலும் இதைபற்றி குறிப்பிட்டுள்ளார்.

மனம் புழுங்கிய அவர்களில் சிலர் போராடத் துவங்கினர். அவர்களுக்கு ஆதரவாக அய்யா வைகுண்டர் போன்றோர் குரல் கொடுத்தனர். அந்த ஆதரவில் ஆங்காங்கே கலகங்களும் எழுந்து அடங்கின. சார்லஸ் மீட் என்ற பாதிரியார் கிறித்தவ ஆலயங்களுக்கு வரும் பெண்களுக்கென்றே ஆடை ஒன்றை வடிவமைத்து அதனை அணியச் செய்தார். பெண்களின் மேலாடைப் போராட்டத்திற்கு பெருமளவில் இவரும் இவரது துணைவியாரும் ஆதரவு தெரிவித்தனர். வரலாற்றாசிரியர் சங்குண்ணி மேனம், மேலாடைப் போராட்டத்திற்குத் தலைவராக மீட் அவர்களே இருந்தார். அவரே இதற்குக் காரணகர்த்தா என்று கூறியுள்ளார். திருவிதாங்கூர் மகாராணியின் முன் ஒரு சாணார் சாதிப் பெண் ரவிக்கை அணிந்து வந்தார் என்பதற்காக அவரது மார்பை வெட்ட திருவிதாங்கூர் நிர்வாகம் உத்தரவிட்டது. இதனை விட நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்த சாணார் உட்பட அனைத்து தாழ்த்தப்பட்ட சாதி நபர்களும் நீதிபதி அமரும் இருக்கையிலிருந்து 64 அடி தொலைவில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

கன்னியாகுமரி அருகேயுள்ள கொட்டாரத்தில் திருமணமான சில நாட்களில் தாலி, மேலாடையுடன் வந்த பெண் அரசாணையை எதிர்த்த குற்றத்துக்காக பொது இடத்தில் தாலியறுத்து உடை களைந்து அரசுப் படையால் கொலை செய்யப்பட்டார். அந்த இடம் இன்றும் தாலியறுத்தான் சந்தை என்ற பெயரில் அழைக்கப்படுகிறதுஅக்காலத்தில் அடிமைச் சின்னமாக, நாடார்கள் உள்ளிட்டு தாழ்த்தப்பட்ட சாதியார் எவரும், தலைப்பாகை அணியக் கூடாது என்று இருந்தள்ளது வைகுண்டர், "நீ யாருக்கும் அடிமை இல்லை. தலைப்பாகை கட்டு" என்றார். தலைப்பாகை கட்டிக் கொண்டே கோயிலுக்குள் பிரவேசம் செய்யவேண்டும் என்றார். இன்னும், வைகுண்டர் உருவாக்கிய பதிகளில் (கோயில்களில்) அந்த நிலைமையே நீடிக்கிறது. தலைப்பாகையோடுதான் உள்ளே நுழைய வேண்டும்.

பெருந்தெய்வக் கோயில்களில் தாழ்த்தப்பட்டோர்க்கு அக்காலத்தில் நுழைவுரிமை இல்லை, இன்றும்கூட பல கோயில்களில் அப்படித்தான். ஆகவே, வைகுண்டர் தாமே பல பதிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டினார். அவர் வாழ்நாளில் ஏழு பதிகளையும், ஏழு நிழல் பதிகளையும் கட்டி இருக்கிறார்.


வைகுண்டர் உருவாக்கிய கோயில்களில் சிலைகள் இல்லை. மாறாகக் கருவறையில், கண்ணாடியும், கண்ணாடிமுன் ஒரு விளக்குச் சுடரையும் வைத்தார். கண்ணாடியினுள் தெரியும் நீயே கடவுள். உனக்குள் சுடரும் ஒளியே கடவுள். உருவ வழிபாட்டுக்கு மாற்றான ஒளி வழிபாட்டை மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் வைகுண்டர்.

தோளுக்குச் சீலை உரிமை கேட்டு தாழ்த்தப்பட்டவர்கள் போராடுகிறார்கள் என்பதை அறிந்த சமஸ்தான மன்னன் கோபத்தின் உச்சிக்கே சென்று விட்டான். "அவர்கள் அப்படித்தான் ஆடை அணியாமல் இருக்க வேண்டும் மீறி அணிந்தால், அவர்களை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஏன்... கொலை கூட செய்யலாம்..." என்று அரக்கத்தனமாக வாய்மொழியாக உத்தரவிட்டான் மன்னன்.

அதன்விளைவு... மார்பை மறைக்க முயன்ற பெண்கள் ஆடை கிழித்து அவமானப்படுத்தப்பட்டனர். சிலர் கொலையும் செய்யப்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாஞ்சில் நாட்டில் உள்ள நெய்யாற்றின்கரை, நெய்யூர், கல்குளம், கோட்டாறு, இரணியல் போன்ற பகுதிகளில் கலவரம் வெடித்தது. அய்யா வைகுண்டரும் இந்த போராட்டத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். தன்னைக் காண வரும் பெண்கள் கண்டிப்பாக தோளுக்கு சீலை அணிந்துதான் வரவேண்டும் என ஆணையிட்டார்.

அன்றைய காலக் கட்டத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பு பெண்கள், தோளுக்கு சீலை அணியக் கூடாது என்று இருந்த வழக்கம் பற்றி தனது அகிலத்திரட்டிலும் பதிவு செய்திருக்கிறார் அவர்.

"பூமக்கள் நீதமுடன் போட்ட தோள்சீலை தன்னைப் போடாதே என்றடித்தானே சிவனே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யா..." என்று குறிப்பிடும் அய்யா,

"என் மக்கள் சான்றோர்கள் இடுப்பில் எடுத்த குடம் ஏண்டி இறக் கென்றானே சிவனே அய்யா...."

என்று, நாடார் குல பெண்கள் இடுப்பில் குடம் வைத்து செல்லக்கூடாது என்று ஆதிக்க ஜாதியினர் கூறியதையும் பதிவு செய்திருக்கிறார். பார்ப்பன வேதமத இந்து சாஸ்திரங்களின் படி, நாயர்கள் உயர்த்தப்பட்ட ஆதிக்கச் சாதியினராகயிருந்தாலும், நாயர் பெண்களுக்குத் திருமணம் செய்து கொள்ள உரிமையில்லை. அவர்கள் பார்ப்பனர்களுக்காக ஒதுக்கிவைக் கப்பட்டவர்களாவர். பார்ப்பனர்களின் விருப்பப்படி ஏற்றுக்கொள்ளவும் கைவிடவும் ஆன சம்பந்தம் (தொடர்பு) மட்டுமே அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. (தர்ம தீர்த்த அடிகளார், இந்து மதக் கொடுங்கோன்மையின் வரலாறு, பக்கம் 269)

கேரளத்தில் திருவிதாங்கூரில் நாயர் சிறுமிகள் பருவமடைவதற்கு முன் "கெட்டு கல்யாணம்" என்ற சடங்கின் வாயிலாக அவர்களைக் கடத்துவது வழக்கமாக இருந்தது. பெரும் ஆடம்பரத்துடனும் பிரதாபத்துடனும் அந்தச் சடங்கு விழாவாகக் கொண்டாடப்பட்டது. தேவதாசிகளின் பெண் பிள்ளைகளுக்கும் தேவனுக்கும் நடைபெறும் திருமணத்திற்கும் இதற்கும் பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை. (தர்மதீர்த்த அடிகளார், பக்கம் 268-269)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமானவர்களாகவும் கருதப்பட்டனர். அவர்கள் "பல கணவர் முறை"யைப் பின்பற்றி பல ஆண்களுக்கு மனைவியாக இருந்தனர். (வி.நாகமய்யா, திருவிதாங்கூர் சமஸ்தான கையேடு, பக்கம்237) பார்ப்பன தந்திரத்தின் கூற்றுப்படி காமம் என்பது மானுட இயற்கை உணர்ச்சிகளிலிருந்து பிறக்கவில்லை. இந்துமதக் கடவுளர்களான சிவனும்- சக்தியும் இணைந்த லீலையிலிருந்துதான் காமம் பிறந்தது. பெண்ணை திரிபுரசுந்தரியாக வரித்து, அவளை முழுமையாக அனுபவித்து தனக்குத்தானே மகிழ்ச்சி அடைவது ஒரு இந்து ஆணின் ஒருவழிமுறை நெறியாகும். இந்துத்துவ ஆட்சியின் வழமைப்படி நாயர் பெண்களும் மற்றும் தீண்டத்தகுந்த ஏனைய சாதிப்பெண்களும் சமூக அந்தஸ்து உடையவரின் முன்பும் நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்கத்தினரின் முன்பும், அரச பரம்பரையின் முன்னிலையிலும் அவர்களை எதிரில் கண்டு வணங்கும்போதோ அல்லது அவர்களைக் கடந்து செல்லும் போதோ அவர்களுக்கு மரியாதை செலுத்துவதன் அடையாளமாக மார்பகங்களைத் திறந்து மூட வேண்டும். (எஸ்.மாட்டீர், ஈகையின் இருப்பிடம்)

ஆண்டுக்கு இருமுறை மகாராஜா கடற்கரையில் ஆராட்டு உற்சவத்திற்காக இந்துமத சடங்குகளை நிறைவேற்றும்போது, நூற்றுக்கணக்கான நாயர் இளம்பெண்கள் திறந்த மார்பகங்களுடன் சாலையில் விளக்குகளை ஏந்தி ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தொலைவு வரை மகாராஜாவின் பின்னால் செல்வார்கள். பெருந்திரளானவர்கள் காமக் கண்களுடனும், வக்கிரப் புத்தியுடனும் இந்நிகழ்வைப் பார்த்து மோகித்து மகிழக் கும்பலாய்க் கூடுவார்கள்.

நாயர் பெண்கள் மத்தியில் புகுத்திவந்த பல கணவர்முறை நம்பூதிரிப் பார்ப்பனர்களின், அரசபரம்பரையின் உடல் இன்பத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இளம் பெண்கள் விபசாரத்திற்குள் தள்ளப்பட்டதும், தந்தையை அறியாத வண்ணம் குழந்தைகள் வளர்த்தெடுக்கப்பட்டதும் பெண்களின் சமூக வாழ்வைப் பெரிதும் பாதித்தது.

இதற்கிடையில், மேலை நாட்டில் இருந்து வந்திருந்த கிறிஸ்தவ பரப்பாளர்கள், நாஞ்சில் நாட்டில் நிலவிய சூழ்நிலையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். கி.பி.1780களிலேயே அவர்கள் நாஞ்சில் நாட்டிற்குள் நுழைந்து விட்டாலும், தோளுக்கு சீலை போராட்டம் தீவிரம் அடைந்த போது, அதற்காக போராடியவர்களுக்காக தங்கள் குரலை எழுப்பினர்.

"தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்ததற்காக ஏன் வருத்தப்படுகிறீர்கள்? கிறிஸ்தவ மதத்திற்கு மாறினால் உங்களுக்கு எல்லா உரிமைகளும் கிடைக்கும். திறந்த மார்போடு திரியாமல் தோளுக்கு சீலை அணிந்து கொள்ளலாம். மேலும், உங்களது பொருளாதாரம் மற்றும் கல்வி வசதிகளுக்கும் ஏற்பாடு செய்து தருகிறோம். உண்பதற்கு சுகாதாரமான, ஆரோக்கியமான உணவும் எங்கள் நிறுவனங்கள் சார்பில் தருகிறோம்..." என்று கூறிய அவர்களது ஆசை வார்த்தைகள், தாழ்த்தப்பட்டோர் பலரது மனதை மாற்றியது. பலர் தங்களை கிறிஸ்தவர்களாக மாற்றிக் கொண்டார்கள். தோளுக்குச் சீலை அணிந்து மார்பை மறைத்தும் கொண்டனர். அவர்களைப் பின்பற்றி தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்த பிற பெண்களும் தோளுக்கு சீலை அணிய ஆரம்பித்தனர்.

இது, ஆதிக்க ஜாதியினருக்கு பிடிக்கவில்லை. "நீங்கள் எந்த மதத்திற்கு மாறினாலும் தாழ்த்தப்பட்டவர்கள்தான்..." என்று கூறி, அவர்களைப் பொது இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானப்படுத்தினர். மதம் மாறிய பெண்கள் அணிந்த மேலாடையைக் கிழித்து எறிந்தனர்.

இந்தப் பிரச்சினை சென்னை மாகாண நீதிமன்றத்திலும் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் ஆங்கிலேயர்கள் என்பதால் ஒரு சார்பாகவே தீர்ப்பு கூறப்பட்டது. 1847 மார்ச் 19-ம் தேதி ஒரு தீர்ப்பை அவர்கள் வெளியிட்டனர்.

"ஒடுக்கப்பட்ட இந்துக்கள் மேலாடை அணியவோ, நகைகள் அணியவோ உரிமை அளிக்கப்பட மாட்டாது. ஆனால், கிறித்தவ மதத்திற்கு மாறியவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு பொருந்தாது" என்று அந்தத் தீர்ப்பில் கூறியது சென்னையில் இருந்த ஆங்கிலேயே நீதிமன்றம்.

இந்தத் தீர்ப்பு ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் கிளர்ந்து எழச் செய்தது. ஆங்காங்கே கலகங்கள் நடந்தன. சான்றோர் என்கிற நாடார் இனத்தில் உயர் வகுப்பினர் இருந்தனர். இவர்கள் நல்ல வசதியோடு வாழ்ந்ததால், இவர்களது பெண்கள் தோளுக்கு சீலை அணிந்து மார்பை மறைத்துக் கொண்டனர். அதே நேரம், அந்த இனத்தில் மேலும் சில உட்பிரிவுகள் இருந்தன. இந்தப் பிரிவில் உள்ளவர்களே பனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டனர் (இன்றும்கூட இந்த பாகுபாடு இந்த சமூகத்தில் உள்ளது. உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள், சம அந்தஸ்தில் உள்ள குடும்பங்களில்தான் பெண் கொடுப்பதும், எடுப்பதுமாக உள்ளனர்).


"கிறித்தவ மதத்திற்கு மாறினால் மட்டும்தான் எங்கள் மானம் காக்கப்படுமா?" என்று பொங்கியெழுந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக, அதுவரை போராட்டத்தில் பங்கேற்காமல் ஒதுங்கி இருந்த நாடார் இன உயர் வகுப்பினரும் போராட்டத்தில் பங்கு பெற்றனர். இவர்கள் அதிகமாக இருந்த பகுதிகளில் ஆதிக்க ஜாதியினருக்கு பதிலடி கொடுக்கப்பட்டது.

நிலைமை மோசமானதால் சென்னை மாகாண கவர்னர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டார். அதைத் தொடர்ந்து, 1859 ஜூலை 26-ம் தேதி திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். "தோளுக்கு சீலை அணியாத பெண்கள் இனி அதை அணிந்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. அதே நேரம், மேல் ஜாதிப் பெண்களைப் போன்று ஆடை அணியக் கூடாது..." என்பதுதான் அந்த அறிவிப்பு.

இதைத் தொடர்ந்து தோளுக்குச் சீலை போராட்டம் நிறைவுக்கு வந்தது. ஆனாலும், மேலாடை அணிவதற்காக, இந்த 18 சமுதாய மக்கள் நடத்திய போராட்டம் வரலாற்றில் அழிக்க முடியாத, ஒரு சமுதாயத்தின் உரிமைப் போராட்டம் என்பதை மட்டும் யாராலும் மறுக்க முடியாது.

---

அம்மா : ஹிட்லர்னா யாரு ?
மகன் : தெரியாது..
அம்மா : கொஞ்சம் படிப்புல கவனமா இரு.
மகன் : பிரியா ஆண்டினா யாரு?
அம்மா : தெரியாது..
மகன் : கொஞ்சம் அப்பா மேல கவனமா இரு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஒரு கிராமத்து அம்மா......
நான் பேருந்துக்காக நின்று
கொண்டு இருந்தேன்......

என்னிடம் வந்தாள்....." ஆத்தா இத
எப்படி பேசுவது?
சொல்லித்தாரியா? கையில் புதிய
போன்..."



# தாயின் ஏக்கம்

நான் சொன்னேன்:" அம்மா பச்சை
பட்டன் அமுக்கினால்
பேசணும்.....சிகப்பு பட்டன்
அமுக்கினால் கட் பண்றது அம்மா
என்று சொன்னேன்....

அதற்கு அந்த அம்மா:" இது என்னோட பையன் வாங்கி கொடுத்தது....." எவ்வளவு பெருமிதம்.......

அந்த அம்மா முகத்தில்......

என்னோட பையன் வெளிநாட்டுல இருக்கான்......மாசம் ஒரு தடவை பேசுவான்.........

இந்த தடவை இரண்டு மாசம் ஆச்சு? பேசவே இல்லை.....

அவருடைய பையன் பேரை சொல்லி அவன் எப்போதாவது போன் பண்ணி இருக்கான்னு பாரும்மா...?" என்றாள்...

நான் பார்த்தேன்.......அந்த பையன் போன்பண்ணவே இல்லை...... நான் சொன்னேன் ஒரு தடவை போன்பண்ணி இருக்காங்க....... நீங்க தான் பாக்கலை பச்சை என்று நெனைச்சு சிகப்ப அமுக்கிடிங்க போல அப்டி என்று பொய் சொன்னேன்...

அம்மாக்கு அவ்வளவு சந்தோசம்..........

சாபட்டீங்களா அம்மா.......என்று கேட்டேன்....

எங்க என்னோட ராசா சாப்பிட்டானோ இல்லையோ? எனக்கு அவனை நெனைச்சா சாப்பாடே இறங்கல....

நான் சொன்னேன்........ நீங்க நல்லா சாப்டா தானே உங்க பையன் வரும்போது என்னோட ராசா என்று கட்டி பிடிக்க தெம்பு இருக்கும் என்றேன்......

அந்த தாய் அழுது விட்டாள்..... அப்பிடியா ஆத்தா சொல்ற இனிமேலே சாப்டறேன்.......

எனக்கு அழுகை வந்து விட்டது....

வெளி நாட்டில் இருக்கும் வெளி ஊரில் இருக்கும் சகோதரர்களே உங்கள் தாயிடம் பேசுங்கள்....


அம்மா என்ற சொல்லுக்காக ஏங்குபவள்......... அவள்

அவளுக்கு என்றும் நீங்கள் குழந்தை தான்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக் கதை

# பெற்ற மனம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய நாட்டில் நடந்த நெஞ்சை உருக வைத்த உண்மை சம்பவம் இது. இங்குள்ள பின்தங்கிய பிரதேசம் ஒன்றில் விதவைப் பெண் ஒருத்தி தனது ஒரேயொரு மகனுடன் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு ஒரு கண் இல்லை. தன் மற்றைய கண்ணை வைத்து கொண்டு வாழ வேண்டிய நிலை. கணவரின் இழப்பிற்கு பிற்பாடு அவளது சுவாசத்தின் ஒவ்வொரு மூச்சும் தன் மகனின் எதிர்கால வாழ்வு பற்றியதாகவே இருந்தது. தன்னிடம் இருந்த சொத்துக்களில் ஒரு பகுதியை விற்று மகனை ஒரு நல்ல தரமிக்க பாடசாலையில் சேர்த்தாள். மீதி சொத்தை தனது மகனின் கல்வி தொடர்பான செலவுகளுக்காக தயார் செய்திருந்தாள்.

நல்ல ஒழுக்கமிக்க மகன். இரக்கமானவன். புத்திசாலி. ஊரில் எல்லோரும் புகழும் வண்ணம் அவன் செயற்பாடுகள் இருந்தன. பாடசாலையில் முதல் இடத்துக்கு வருபவன் அவன். காலங்கள் உருண்டன. ஒரு முறை அவன் மிகச்சிறந்த பெறுபேற்றினை பெற்று அந்த பிரதேசத்திற்கும், அவனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தான்.

இந்த செய்தியை அறிந்த உடனேயே அந்த தாய் ஆவலுடன் பாடசாலை நோக்கி ஓடினாள். மகனின் வகுப்பறை எது என அறிந்து அங்கு சென்று அவனை வாரி அணைத்து முத்தமிட்டாள். இறைவனை புகழ்ந்தாள். சந்தோஷத்துடன் வீடு வந்து அவனுக்கு பிடித்தமான உணவை தயாரிக்க ஆரம்பித்தாள்.

மகனின் வரவை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்து காத்திருந்த தாய் மகன் வந்தவுடன் வாஞ்ஞையுடன் அருகில் சென்றாள். ஆனால் மகன் முகத்தை திருப்பி கொண்டான். தாயுடன் பேசவில்லை. நேராக அறைக்குள் சென்று படுத்து விட்டான். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. பதற்றத்துடன் ஓடிச்சென்று என்னவென்றாள் கவலையுடன். மகன் சொன்னான், " நீ ஏன் என் பாடசாலைக்கு வந்தாய்?. அங்கு அழகான பணக்காரர்கள் மட்டுமே வருவார்கள். நீயோ குருடி. என் நண்பர்கள் என்னை குருடியின் மகன் என கூப்பிடுகின்றனர். இது பெரிய அவமானம். வெட்கம். நீ என் பாடசாலை பக்கமே வராதே" என கத்தினான் கோப மாக. அதிர்ந்து போனாள் தாய். ஆனாலும் மகனின் சந்தோஷம் கருதி இனி அவ்வாறு நடக் காது என சத்தியம் செய்தாள்.

இப்போது அவனது சுபாவம் மேலும் மாறுபட ஆரம்பித்தது. தன்னை தேடி வரும் நண்பர்கள் முன் வர வேண்டாம் என தாயை எச்சரித்தான். அவள் கண்கலங்க சரி என்றாள். பின்னர் சில நாட்கள் சென்ற பின், தனக்கு குருடியுடன் இருப்பது வெட்கம் என்றும், தான் ஹாஸ்டலில் தங்கி படிப்பதாக சொன்னான். ஒரு நாள் வீட்டை விட்டே சென்று விட்டான். அவள் கதறி துடித்தாள், தினமும் தன் மகனை நினைத்து. அழுவாள்.

காலங்கள் உருண்டோடியது.இன் நிலையில் இறுதி பரீட்சையில் பாஸாகி, மருத்துவ கல்லூரிக்கு மகன் தேர்வானது அவளுக்கு தெரியவந்தது. தலை நகர் சென்று படிக்க வேண்டும். நிறைய செலவாகும். எனவே தன்னிடம் மீதமிருந்த அனைத்து சொத்துக்களையும் விற்று மகனுக்கு அனுப்பி வைத்தாள். 6 ஆண்டுகள் பறந்து சென்றன. இப்போது அவளது மகன் ஒரு மருத்துவன்.

அவனைப்பார்க்க அவள் பல முயற்ச்சிகளை மேற்கொண்டும் எதுவும் பயனற்று போயின. ஒரு கடிதம் மகனிடம் இருந்து வந்தது. அதில், "அம்மா, நான் இப்போது இந்த நாட்டில் உள்ள சிறந்த வைத்தியர்களில் ஒருவன். குருடியின் மகன் வைத்தியன் என்பது தெரிந்தால் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவம் பாதிப்படையும். ஆதலால் நான் இந்த நாட்டை விட்டும் உன் பார்வையை விட்டும் கண்காணாத தேசம் செல்கிறேன் என்னை தேட வேண்டாம்.". இது தான் அந்த கடிதத்தின் வரிகள். துடித்து போனாள் தாய்.

சில வருடங்கள் கடந்தன. முதுமையும், வறுமையும், அவளது ஒற்றை கண்ணுமே அவளிடம் எஞ்சியிருந்த சொத்துக்கள். பசி காரணமாக ஒரு பணக்கார வீட்டில் ஆயாவாக தினமும் வேலை செய்து வந்தாள் அந்த தாய். அந்த வீட்டின் எஜமானி இளவயதினள். நல்ல இளகிய குணம் படைத்தவள்.. அவளும் ஒரு வைத்தியராகவே இருந்தாள். இந்த தாயை தனது தாயாக நேசித்து வந்தாள். எல்லாம் நன்றாகவே நடந்தன.

அவளது கணவன் அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்தான். தனது எஜமானியின் கணவர் வருகிறார் என்பதனால் வாய்க்கு ருஷியாக நல்ல உணவுகளை தயார்படுத்தி வைத்திருந்தாள் அந்த குருட்டு தாய்.

வீடு வந்த அவளது கணவன், சில நாளிகைகளின் பின்னர் சாப்பிட அமர்ந்தான். உணவை ஆசையாக வாயில் அள்ளி திணித்தான். திடீரென அவன் முகம் மாறியது. கருமை அவன் முகத்தில் அப்பி கொண்டது. அங்கே அவனது குருட்டு தாய்.

அதிர்ந்து போனார்கள் இருவரும். இவள் இங்கேயா எனும் ஆத்திரமும், வெறுப்பும் அவன் மூளையை ஆட்டுவித்தது. என் மருமகளா என் எஜமானி என்ற சந்தோஷமும், மகிழ்ச்சியும் அந்த தாயின் இதயத்தை நிரப்பின. உணர்சிகளால் இருவருமே பேசவில்லை.

அறைக்கு வந்த வைத்தியன் தன் மனைவியை பார்த்து, "இந்த குருடியை உடனடியாக கொண்டு சென்று கண்காணாத இடத்தில் எங்காவது விட்டு விடு.". கத்தினான். அவன் சத்தம் அடுப்படியில் நின்ற அந்த அபலை தாயின் இதயத்தில் முட்டி மோதி நின்றது. துவண்டு போனாள். வாழ்க்கையை இதற்கு பிறகும் வாழ வேண்டுமா என எண்ணி அழுதாள்.

தனது கணவனின் பிடிவாதமும், கோபமும், ஆவேசமும் எல்லை மீறி செல்லவே, அவனது மனைவியான அந்த பெண் வைத்தியர் வேறு வழியின்றி அவளுக்கு போதுமான பணத்தினை வழங்கி பல நூறு கிலோ மீட்டர் தூரத்தில் முன்பு அவள் வாழ்ந்து வந்த இடத்திற்கே மீண்டும் அனுப்பி வைத்தாள் அழுகையுடன்.

காலம் மீண்டும் வேகமாக அசைந்தது. இப்போது அந்த வைத்தியனின் தலை மயிர்கள் பழுக்க ஆரம்பித்து விட்டன. உடல் சற்று சோர்ந்தும் போய்விட்டது.மனைவியும் இறந்து விட்டாள். இப்போது வைத்தியரிடம் பணத்தை தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. எதிர்காலங்கள் சூனியமான நிலையில், ஆறுதலுக்கு கூட தலை வருட யாரும் இன்றி தனி மரமாக நின்றான். மெல்ல மெல்ல தான் தன் தாயாருக்கு செய்த துரோகங்கள், அநியாயங்கள், நோகடிப்புக்கள் அவன் உள்ளத்ததை வந்து உசுப்ப ஆரம்பித்தன. ஒரு முறை நடுநிசியில் எழும்பி அம்மா என கத்தி அழும் அளவுக்கு அவனுக்கு தனது பாவங்களின் பாரம் புரிந்து போனது.

ஒரு நாள் காலை அவன் தொலைபேசிக்கு ஒரு செய்தி வந்தது. அவனது தூரத்து உறவினர் ஒருவர் பேசினார். "உன் தாய் தள்ளாத வயதில் மரணிக்கும் தறுவாயில் இருக்கிறாள்" என்பதே அந்த செய்தி. உடனடியாகவே அவன் தனது காரில் கிளம்பி தாயிருக்கும் இடத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான். அவன் சென்ற போது, அவளது உயிர் பிரிந்து விட்டது. உயிர் போன நிலையில் அவளை கட்டிலில் கிடத்தி வைத்திருந்தனர். இப்போது "அம்மா" என கதறினான். கண்ணீர் விட்டான். இறந்த தனது தாயை நல்ல முறையில் அடக்கம் செய்ய உதவினான்.

அப்பொழுது ஒரு கடிதத்தை அவனது உறவுக்காரர் கொடுத்தார். தான் மறைந்த பின்னர், மகன் வருவதாக இருந்தால் மட்டும் கொடுக்குமாறும், இல்லையெனில் எரித்து விடுமாறும் தாயார் கடைசி தருவாயில் வேண்டிக் கொண்டதாகவும் அவர் சொன்னார். பிரித்து வாசித்தான். அவன் கண்களில் இருந்த வழிந்த கண்ணீர் அந்த பிரதேசத்தையே சகதியாக மாற்றியது. அதில் இருந்த வரிகள் இதுதான்.............

"அன்பின் மகனே!..

எனக்கு தெரியும், என் உருவத்தை பார்ப்பது உனக்கு ஒரு போதும் பிடிக்காது என்று. அதனாலேயே, எனது மரணத்திற்கு பின்னர் நீ வந்தால் மட்டும் இதனை கொடுக்கும்படி சொன்னேன்.

மற்றபடி எனது அன்பு என்றும் மாறாதது. அது இறைவனுக்கு மட்டுமே தெரிந்த விஷயம். மகனே நான் குருடிதான். உனக்கு குருடி தாய் இருந்திருக்க கூடாது தான். எனக்கு உன்யாக உள்ளம் புரிகிறது. உனது உள்ளத்து உணர்வுகளை நான் பெரிதுமே மதிக்கின்றேன். நான் உன்னை சபித்தது கிடையாது. ஏன் கோபப்பட்டது கூட கிடையாது. எனக்கு ஒரு வாழ்க்கை வேண்டும் என்றிருந்தால் நான் இன்னொரு திருமணம் முடித்து நன்றாக வாழ்ந்திருப்பேன். உனக்காகவே நான் வாழ்ந்தேன். அதை நீ புரிந்து கொள்ளாமல் போய் விட்டாய்!

மகனே உனக்கு தெரியுமா? நான் ஏன் குருடியானேன் என்று. அப்போது உனக்கு 3வயது. பாதையில் நின்று நீ விளையாடிக்கொண்டிருந்தாய். அப்போது உன் கண்களில் எங்கிருந்தோ வந்த கல் ஒன்று பட்டு உன் ஒரு கண் குருடாகி விட்டது. வைத்தியர்கள் இன்னொரு வெண்படலம் இருந்தால் மட்டுமே உன் பார்வையை மீண்டும் கிடைக்க வைக்கலாம் என்றனர். என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரமும் போதாது.

அதனால்....
என் ஒரு கண்ணை உடனடியாக தானம் செய்து உனக்கு பார்வை கிடைக்க செய்தேன். எனது கண்மணியே இன்று உன் கண்களாக இருக்கிறது. நீ இந்த உலகத்தை, வாழ்க்கையை பார்ப்பதும் அந்த கண்களாலேயே!...

உனக்கு இதுவும் அவமானம் என்றால் உனது வலது கண்ணை பிடுங்கி எறிந்து விடு. ஏனென்றால் அது ஓர் குருடியின் கண்ணல்லாவா?

இல்லை மனமிருந்தால் அப்படியே விட்டு விடு. அந்த கண்களால் நான் உன்னை பார்த்துகொண்டிருப்பேன்."

இப்படிக்கு,
என்றுமே உயிரினும் மேலான அன்புவைத்துள்ள, உன் குருட்டு அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நியுயோர்க் நகரில் உள்ள புரூக்ளின் ப்ரிட்ஜ் கட்டிய ஜான் ரூப்ளிங் என்ற இஞ்சினியரின் வாழ்கையில் நடந்த உண்மை சம்பவம்.

1883 ஆம் ஆண்டு ஜான் ரூப்ளிங் என்ற இஞ்சினியர் கிழக்கு நதியின் மேல் மிக நீளமான தொங்கு பாலம் கட்ட முடிவெடுத்தார்.பாலம் கட்டுவதில் கைத்தேர்ந்த பல இஞ்சினியர்கள் இது முடியாத காரியம் இதை கை விடுவதுதான் சரியான முடிவு என்றனர்.இது போன்று தொங்குபாலம் இதற்கு முன் யாரும் கட்டியது இல்லை இனி கட்டவும் முடியாது என்றனர்.

ரூப்ளிங் தன்னால் இதை கண்டிப்பாக கட்ட முடியும் என்று நம்பினார்.முழு நேரமும் இதே சிந்தனையுடன் இருந்தார்.இதை யாரிடமாவது சொல்லி புரிய வைக்க வேண்டும் என்று விரும்பினார்.பிறகு தன் மகனுடன் இதைப்பற்றி சொல்ல நினைத்தார்.அவருடைய மகன் வாஷிங்டன் ஒரு இளம் வயது இஞ்சினியர்.

தந்தையும் மகனும் இணைந்து எப்படி இந்த பாலத்தை கட்டுவது என்று ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தார்கள் .என்னவெல்லாம் இடர்கள் வரும் எப்படி எல்லாம் அதை எதிர்த்து செயல் படுத்த வேண்டும் அன்று ஆலோசித்தார்கள்.

# முடியும் என்று நினைத்தால் முடியாதது என்று எதுவும் இல்லை...!



இரண்டு பேரும் சேர்ந்து பாலம் கட்டுவதற்கான வேலையை ஆரம்பித்தார்கள். சில மாதங்கள் வேலை நன்றாக நடந்தது,பிறகு ஒரு நாள் வேலை செய்யும் இடத்தில் ஒரு விபத்து நடந்தது.அந்த விபத்தில் ஜான் ரூப்ளிங் இறந்து விட்டார், வாஷிங்டன்னுக்கு தலையில் அடிப்பட்டு மூளைக்கு பாதிப்பு ஏற்பட்டது. அவரால் நடக்கவும் ,பேசவும் முடியாத நிலை ஏற்பட்டது.




எல்லா இஞ்சினியர்களும் நாங்கள் அப்பவே சொன்னோம் இது தேவை இல்லாத வேலை பாலம் கட்டுவது முடியாத காரியம் என்று ஏளனமாக பேச ஆரம்பித்தனர்.

இந்த பாலம் கட்டுவதை தெரிந்தவர் இரண்டு பேர் மட்டுமே. ஒருவர் இறந்து




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்டார் இன்னொருவர் கை கால் அசைவு இல்லாமல் இருக்கிறார். வாஷிங்டன் மருத்துவமனையில் படுத்திருந்தாலும் அவர் மனம் முழுக்க அந்த பாலத்தை கட்டுவதை பற்றியே யோசித்து கொண்டு இருந்தது.



ஒரு நாள் அவர் மருத்துவமனையில் இருக்கும்போது மெல்லிய காற்று வீசியது ஜன்னல் திரை விலகியதும் அவரால் வானத்தையும் மரங்களையும் பார்க்க முடிந்தது. இயற்கை என்னவோ நம்மிடம் சொல்ல நினைக்கிறது என்று யோசித்தார் பிறகு மெல்லமாக ஒரு விரலை மட்டும் அசைத்து பார்த்தார் விரல் அசைந்தது.


விரல் அசைவு மூலம் தன் மனைவியிடம் தன் ஆசையை கூறினார், மீண்டும் இஞ்சினியர்களை வரவழைத்து வேலையை ஆரம்பிக்க சொன்னார். விரல் அசைவு உரையாடல் மூலமே தன் மனைவியின் உள்ளங்கையில் தடவி அவளுக்கு புரிய வைப்பார். மனைவி இஞ்சினியர்களுக்கு கட்டளை பிறப்பித்து கொண்டு இருப்பார். விரல் அசைவு மூலமாகவே **11** ஆண்டுகள் தன் மனைவி உள்ளங்கையில் தடவி இந்த பாலத்தை கட்டி முடித்தார்.




இன்று கம்பீரமாக நிற்கும் புருக்ளின் பிரிட்ஜ் கணவன் மற்றும் மனைவி இருவரின் உள்ளங்கை உரையாடல் மூலமே கட்டப்பட்டது.

---

ஒரு முறை சர்தார், நண்பர் வீட்டிற்கு விருந்துக்கு சென்றிருந்தார். அப்போது ஜாலியாக எல்லோரும் ஜோக் அடித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருந்தனர். நண்பர் சர்தாரிடம் ஒரு கடி ஜோக் சொன்னார். அவர் சர்தாரிடம், "நீங்க வெறும் வயிற்றில் எத்தனை இட்லி சாப்பிடுவீங்க?"
என்று கேட்டார். அதற்கு சர்தார் சொன்னார்,
"வெறும் வயிற்றில் எட்டு இட்லி சாப்பிடுவேன்" என்றார்.
உடனே நண்பர் சொன்னார், "அது எப்படி முடியும், ஒரு இட்லி சாப்பிட்ட உடனேயே வயிறு வெறும் வயிறாக இருக்காதே" என்றார்..
சர்தார் அசடு வழிந்து சிரித்துக் கொண்டார். தான் வீட்டிற்க்கு சென்றவுடன் தன் மனைவியிடம் இந்த ஜோக்கை சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். வீட்டிற்க்கு வந்த உடன் நேரே மனைவியிடம் சென்று "நீ வெறும் வயிற்றில் எத்தனை இட்லி சாப்பிடுவாய்?" என்று கேட்டார். அதற்க்கு அவர் மனைவி சொன்னார், ஆறு இட்லி வரைக்கும் சாப்பிடுவேன் என்றார். உடனே சர்தார் கடுப்பாகி சொன்னார், "போடி.. எட்டு இட்லின்னு சொல்லியிருந்தா, ஒரு நல்ல ஜோக்கு சொல்லியிருப்பேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் உன்னதமான பரிசு நோபல்

இன்றைய உலகில் நோபல் பரிசு என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகக் கருதப்படுவதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை நோபல் பரிசு (Nobel Prize) ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும் பெரும் பயன் விளைவிக்கும் தொழில்நுட்பங்கள் அல்லது கருவிகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் . பல துறைகளுக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டாலும் சமாதானத்திற்காக வழங்கப்படும் நோபல் பரிசே அதிகளவிலான பிரச்சாரமும், முக்கியமும் பெற்றுவிடுகிறது. அதிலும் அதைப் பெறுபவர் பொருளாதார அரசியல், இராணுவப் பின்னணி கொண்ட ஒருவரென்றால் சொல்லவே தேவையில்லை. ஊடகங்கள் எல்லாம் ஒன்று திரண்டு முழங்கித் தள்ளிவிடுவார்கள். நோபல் பரிசின் தந்தை என்று வர்ணிக்கப்படும் அல்பிரட் நோபல் அவர்கள் 1833 அக்டோபர் 21ம் திகதி சுவீடனின் தலைநகர் ஸ்ரொக்கோமில் இம்மானுவல் நோபல் என்பவரின் மூன்றாவது மகனாகப் பிறந்தார். அல்பிரட் நோபலின் குடும்பம் மிகப்பெரும் செல்வந்தர்களாகவும், பொறியியலாளர்களாகவும், தொழிலதிபர்களாகவும் மற்றும் பௌதீகம், இரசாயனம் போன்றவற்றில் மிகப்பெரும் ஆற்றல் உடையவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

அல்பிரட் நோபல் அவர்கள் மழைக்காகக் கூட பாடசாலையில் ஒதுங்கியவர் அல்ல. நன்கு பயிற்றப்பட்ட மிக நுணுக்கமாக ஆராய்வு செய்யப்பட்ட ஆசிரியர்களால் அவருக்கு வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. அல்பிரட் நோபலுக்கு எட்டு வயதாக இருக்கும்போது அவருடைய குடும்பம் ரஸ்யாவின் சென்பீட்டர்ஸ் நகருக்குக் குடி பெயர்ந்தது.

அங்கு இவருடைய தந்தையார் ஆயுத விற்பனைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தார். அன்றைய ரஸ்ய இராணுவத்தினர்க்கு நிலக்கண்ணி வெடிகளையும், இதர இராணுவ உபகர ணங்களையும் வழங்கிவந்தது இவருடைய தொழிற்சாலை. நன்கு கல்விகற்ற ஆசிரியர்களி டம் பயின்ற நோபல் இரசாயனவியலில் மாபெரும் திறமை மிக்க மனிதராக மாற்றம் பெற்றார். ஆனால் தகப்பனாரின் ஆயுதத் தொழிற்சாலை 1856ல் ஆயுத விற்பனையில் பெரும் வீழ்ச்சிகண்டு இறுதியில் மூடுவிழாவும் கண்டது. இதனால் முழுக்குடும்பமும் சுவீடன் திரும்ப




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடிவு செய்தது.

ஆனால் இந்த இடத்தில்தான் அல்பிரட் நோபல் தன்னை சரியாக அடையாளம் காட்டுகிறார். தோல்வியால் மனம் துவண்டு விடாத அவர் தானும் தம்பியும் இங்கேயே இருந்து வீழ்ந்த தொழிற்சாலையை மீண்டும் புத்தெழுச்சி பெற வைப்போம் என்று கூறி, தாய், தந்தை, சகோதரன் எமில் ஆகியோரை சுவீடன் அனுப்பி வைக்கிறார்.



ஆனால் அல்பிரட் நோபலுக்கு அந்த சென் பீட்டர்ஸ்பேர்க் நகரத்தைவிட்டு செல்லவே விருப்பமில்லை. காரணம் அன்றைய நிலையில் அந்த நகரம் செல்வந்தர்களால் நிரம்பி, மிகப்பெரிய ஆடம்பர வாழ்வினை வாழும் ஒரு நகரமாக விளங்கியது. அரண்மனை போன்ற வீடுகளும் அதற்குள் பெரிய லஸ்கர் விளக்குகள் பொருத்தி, உலகின் முன்னணி கலைஞர்களால் தீட்டப்பட்ட ஓவியங்களைக் கொண்டும், அதி உயர் நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட ஆடை ஆபரணங்களை கொண்ட மனிதர்கள் வலம் வரும் நகரமாகவும் இருந்த காரணத்தால் அது உலகின் சுவர்க்கபுரியாக வர்ணிக்கப்பட்டது.

வாழ்ந்தாலும் அங்குதான் வீழ்ந்தாலும் அங்குதான் என்ற முடிவுடன் இருந்த அல்பிரட் நோபல் மீண்டும் தொழிற்சாலையைத் திறந்ததுடன் டைனமற் என்ற வெடி மருந்தினையும் **1963**ம் ஆண்டு கண்டு பிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பு அல்பிரட் நோபல் என்ற மனிதனை உலகறியச் செய்ததுடன் மிகப்பெரிய செல்வந்தனாகவும், உலகறிந்த ஒரு தொழிலதிபராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாற்றியதுடன் ஐரோப்பாவின் நம்பர் 1 தொழில் அதிபர் என்ற பெயரையும் அவருக்கு ஈட்டிக் கொடுத்தது.

மாபெரும் வெற்றி கண்ட அல்பிரட் நோபல் மறுபடியும் தாயகம் திரும்பி அங்கும் மாபெரும் வெடி மருந்துத் தொழிற் சாலை ஒன்றை ஆரம்பித்தார். அவரின் தொடர் வெற்றிகளால் கண்ணூறு நாவூறு பட்டதோ என்னவோ 1864ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு தவறுதலான வெடி விபத்தில் தனது இளைய சகோதரன் எமிலை பறிகொடுக்க வேண்டி ஏற்பட்டது.

ஒரு பெரும் கண்டு பிடிப்பாளனாகவும், தொழில் அதிபராகவும் அதி உயர் தன்னம்பிக்கை கொண்ட மனிதனாகவும் அல்பிரட் நோபல் இருந்தாலும் கூட சகோதரனது இழப்பு அவரை ஆட வைத்து விட்டது. இந்த இழப்பு அவரை இறுதிக்காலம் வரை வாட்டாமல் வாட்டிக் கொண்டே இருந்தது.

சிகரங்களை தொட்டுவிட்டாலும் கூட ஒரு கட்டத்தில் தனக்கென மனைவி, பிள்ளை, குடும்பம் என்று எதுவுமே இல்லாது வாழ்ந்துவிட்டதைக் கண்டு கொண்டார். எனினும் இலக்கியத்தில் மிகுந்த நாட்டமுடையவராகவும், ஒரு நடிகராகவும், கவிதைகள் எழுதுபவராகவும் தனது ஓய்வு நேரங்களை நகர்த்தி வந்தார்.

அதேவேளை அவருள் ஒரு மனித நேயம் அருவமாக இயங்கிக் கொண்டே இருந்தது. தான் ஒரு வெடிமருந்து தொழிற்சாலை அதிபராக இருந்தாலும் அவற்றை மனித குல அழிவிற்கு பயன்படுத்தலாகாது என்ற எண்ணம் காணப்பட்டது. இதனால்தான் இராணுவ மயப்படுத்தல், யுத்தம் போன்ற காரியங்களை அவர் இதயம் வெறுத்தது.

இதன் காரணமாகவே அன்றைய நிலையில் அவரிடமிருந்த 31 மில்லியன் குறோணர்களை ( இன்றைய பெறுமதி 1.2 மில்லியாட் குறோணர்கள் ) உலக சமாதானம், இலக்கியம் போன்ற விடயங்களுக்கு பயன்பட வேண்டுமென்று கருதி 27 நவம்பர் 1895ல் தனது உயிலினை வரைந்தார். அதன் பிரகாரம் பௌதிகம், இரசாயனம், சமாதானம், மருத்துவம் அல்லது உடலியல் போன்றவற்றிற்கான நோபல் பரிசாக வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

1895ல் அவர் உயிலினை வரைந்திருந்தாலும் 1901ம் ஆண்டிலேயே முதல் நோபல் பரிசுக்கான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு பரிசு வழங்குவது ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலப் பரிசுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லியன் குறோணர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முதல் உலக யுத்தத்தின் போதும், இரண்டாவது உலக யுத்தத்தின் போதும் நோபல் பரிசு வழங்குவதில் தடைகளும், இடைஞ்சல்களும் ஏற்பட்டதோடு மாத்திரமல்லாது நோபல் பரிசுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் பின் பணத்தின் பெறுமதி காலத்திற்குக் காலம் மாறி தற்போது அதன் பெறுமதி 2 பில்லியன் குறோணர்களாக உள்ளது.

1968 ம் ஆண்டு சுவீடனின் மத்தியவங்கி புதிதாக ஒரு நோபல் பரிசினையும், அல்பிரட் நோபல் அவர்களுடைய பெயரினால் அறிவித்தது. அதன் பின்னரே பொருளியல் விஞ்ஞானத்துறைக்கும் பரிசு வழங்கப்படலாயிற்று. நோபல் பரிசு தனி நபர்களுக்காக, நிறுவனங்களுக்காக, அமைப்புக்களுக்காக என்றும், இருவருக்காக மூவருக்காக என்றும் பரிசை பிரித்து வழங்கிய நிகழ்வுகளும் அவ்வப்போது நடைபெற்றுள்ளது.

அதேவேளை ஒரே நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பௌதிகவியல், இரசாயனவியல் போன்ற துறைகளுக்காக இப்பரிசினைப் பெற்றுள்ளார். இயற்பியல், வேதியியல், இலக்கியம், மருத்துவம் அல்லது உடலியங்கியல், பொருளியல் மற்றும் அமைதி ஆகிய துறைகளில் இப்பரிசு தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

வருடந்தோறும் நோபல் அவர்களின் நினைவு தினமான டிசம்பர் மாதம் பத்தாம் நாள் அன்று , அமைதிக்கான நோபல் பரிசு தவிர மற்ற அனைத்து நோபல் பரிசுகளும், சுவிடனில் உள்ள ஸ்டோக்ஹோம் நகரத்தில் வழங்கப்படுகின்றன.

பரிசு பெறுவோரின் சொற்பொழிவு , இந்நிகழ்ச்சியின் முன்தினம் நடை பெறுவது வழக்கம்.அதே டிசம்பர் பத்தாம் நாள் , நோர்வேயில் உள்ள ஒஸ்லோ நகரில் , அமைதிக்கான நோபல் பரிசு வழங்கும் விழா மற்றும் பரிசு பெறுவோரின் சொற்பொழிவும் நடைபெறும்.

அல்பிரேட் நோபல் உயில் எழுதும் சமயத்தில நோர்வேவும் சுவிடனும் ஒரே கூட்டு- பிரதேசமாக இருந்ததால் ,நோர்வேயில் அமைதிக்கான பரிசும்,சுவிடனில் மற்ற பரிசுகளும் வழங்கபடுகின்றன. இந்நிகழ்ச்சியும் , இதனையொட்டி நடைபெறும் விழாக்களும் , சமீப காலமாக உலகளாவிய நிகழ்ச்சியாக விளங்குகின்றன.

---

கூட்டம் திமிறிக்கொண்டிருந்த ஒரு கல்யாண வரவேற்பில் மிக அழகான பெண்ணைத் தேடிப் பிடித்துப் பேசினார் நடுத்தர வயது இளைஞர் ஒருவர்.



அவர் : மேடம் .. .. இந்த கல்யாண கலாட்டாவுல என் பொண்டாட்டியைத் தொலைச்சுட்டேன் கொஞ்ச நேரம் என்கூட பேசிட்டிருக்க முடியுமா ? என்று கேட்டார்.

அழகிக்கு கோபம் வந்துவிட்டது.

அழகி : ஏய் மிஸ்டர் என்னை என்னன்னு நெனைச்சுட்டீங்க ? நான் எதுக்கு உங்ககூட பேசணும் ? என்றாள் சீற்றத்தோடு.

அவர் : ஸாரி, மேடம் .. .. .. தப்பா நெனைச்சுக்காதீங்க. அழகான ஒரு பொண்ணோட நான் பேசிட்டு இருக்கறப்பல்லாம் எங்கிருந்தாலும் உடனே ஒடிவந்து என் முன்னால ஆஜராயிடுவா என் பொண்டாட்டி அதுக்காகச் சொன்னேன் - பணிவாகச் சொன்னார் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மேம்பாடு

கண்களில் மைபூசி
களவாய் கைத் தொலைபேசியை
பைகளிலே போட்டுவிட்டு
கைகளில் ஏந்தும் பெண்ணே!

சைலன்றில செல்போனை வைத்து
சஸ்பன்ரா காதலித்து விட்டு
பைபரேசனா மனம் கதறி
ரிங்ரோனா அழுவதும் சரிதானோ?




யாழ் இசை கேட்கும்
யாழ்ப்பாணம் சீர் கெடலாமோ?
பாழ் பட்டுப் போக
பசங்க நாம் விட்டிடலாமோ?

யாழ் மீட்டுவோம்
இசை பெருகட்டும்!
"யாழ்" ஒன்றிக்க
வழி பிறக்கட்டும்!

செல்வி.மிஷாந்தி செல்வராஜா B.A
அரியாலை.

## நடு வீதி நிற்பார் மனிதரில்லை

தம்பிராசா பரமலிங்கம்
17/22A நாவலர் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

நேர்வழி செல்வது என்பணி
நேரினும் இடர்பல வழுவாது!
ஆரெதிர் குறுக்கீடு செய்யினும்
ஆகாது சினத்தள் இலட்சியம்!

பிழைவழி செல்வார் பின்னாலே
போவதும் சரிதனை தடுத்திடும்!
விளைவது நல்லதை பார்க்கிலும்
வில்லங்க நிலையே மெத்தவாம்!

நல்வழி கொள்பவர் எதிரிலாம்
நேரெதிர் குணத்தவர் அணுகினும்
பொல்லா ஆத்திரம் சூழ்தலை
பொறுத்தார் பூமியாழ்வார்.

பிழைவிடும் ஒருவர் பாதித்தால்
பிழைவிடாப் பாவியும் மூழ்குதல்!

அழைத்திடு விதியென நேர்வதும்
ஆக்கப் பட்டிடாச் சட்டமாம்!

விடும்பிழை திருத்தப் பட்டாலே
விதிமுறை எல்லார்க்கும் ஒன்றாகும்!
நடுத்தெரு உயிர் விடல் நடக்காது
நல்வழி பிரயாணம் நடந்தேறும்!

போக்கு வரவுக்கு பயன்படும்
பாதை அனைவரின் பொது சொத்து!
நாக்குத் தொங்க நாய் போன்று
நடுவழி நிற்போர் மனிதரில்லை

விபத்து ஏற்படல் அவசரம்
விதிமுறை மீறல் என்பதாலே!
அபத்தம் போதையில் வாகனம்
அலுவல் நிமிர்த்தமும் செலுத்துதல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்திருத்தம்

ஆறறிவு மனிதனுக்கு வேண்டு மோர் சீர்திருத்தம்
ஆயிரந் தலை முறைக்கும்; – அவசியமேயில்லை
ஐந்தறிவு மிருகத்திற்கும்; பறவைக்கும்

வேண்டுமொரு சீர்திருத்தம் இரு சாதிக்கும்
அடக்கி யொடுக்கும் ஆணுக்கும் – அவனால்
அடங்கிப் போகும் பெண்ணுக்கும்

முப்பதாண்டுப் போர் முடிந்தும் முனைத் தெழும் சாதியம் (எனும்)
புற்றிலிருந்தெழும் அரவத்தை அழித்திட
வேண்டுமொரு சீர்திருத்தம் – ஈழத் தமிழர்க்கு

முள்ளி வாய்க்கால் வரை முடிவு கண்ட போரினால்
முழுவதையும் இழந்த சமூகம் – போதையிலே துவ(ழு)
வேண்டு மொரு சீர்திருத்தம் போதைக்கு (மது) போதையர்க்கு)

காணி பிடிக்கும் காட்டாச்சிக்காரர் களவு செய்யும்
காடையர்கள் – கலங்கி நிற்கும் தமிழர்க்கு
வேண்டு மோர் சீர் திருத்தம் – வடக்கில் (தாயகத்தில்)

அல்லும் பகலும் அயராதுழைத்தும் – முதுசம் பல
சேர்த்தும் எட்ட முடியாத சீதன சந்தையிலே
வேண்டு மொரு சீர்திரத்தம் – விலை மகனுக்கு

வக்கிர காமத்தினால் பூப்பெய்தும் மொட்டுக்களை
கருவறுக்கும் காமக் கேளிக்கைக்கு
வேண்டு மொரு சீர்திருத்தம் – காமுகரிடம்

அரசியல் அடிமைத்தனம் பொறுக்காமல்
ஆயுதப் போரின் பின்னும் அடிமையானவர்க்கு
வேண்டுமொரு சீர்திருத்தம் – சிறை வாழ்வில்

அகதிக் குடித்தனம் அகலக்கால் விரிக்க
அவுஸ்ரேலியாவே தஞ்சமென ஆகுதியாவோர்க்கு
வேண்டு மொரு சீர்திருத்தம் – அலைகடலில் (ஆழ்கடலில்)

*வண ஜெயராசா தேவ அருட் செல்வம்* சில்லாலை – பண்டத்தரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரு வெளிநாடகம் ஊடாக வாசிப்பின் மேம்பாடு

● எஸ்.ரி. அருள்குமரன்
*ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி*

நாடகம் பல்பரிமானம் உடைய கலையாகும். மனிதர்களது உணர்வுகளினை பதிவுசெய்வதிலும் மனிதனது வாழ்வியல் வலிகளினை வெளிப்படுத்துவதிலும் அவர்களிடையே விழிப்புனர்வினை ஏற்ப்படுத்திச் செல்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மனிதநாகரிக வளர்ச்சிக்காலகட்டம் முதல் இக்கலையின் வகிபங்கு காத்திரமானதாக காணப்படுகின்றது.

நாடகமானது சிறுவர் நாடகங்கள், சமூகநாடக நாடகங்கள், தெருவெளி நாடகங்கள் என பல வகையான நாடகங்கள் காணப்படுகின்றன.

இவ் வடிவங்களில் தெருவெளி நாடகங்கள் மாறுபட்டனவானவும் சமூகவியல் நோக்கில் காத்திரமானதாகவும் விளங்குகின்றது.

பார்வையாளரிடையே செய்தியினை காவிச்செல்வதிலும் பார்வையாளர்களுடன் நெருக்கமான உணர்வினை பேணுவதிலும் எளிமையான வடிவமாகவும் காணப்படுகின்றது.

தெருவெளி அரங்கானது பெரும்பாலும் விழிப்புனர்வு சார்ந்த வகையிலான செயற்திட்டங்களினை முன்னெடுத்துச் செல்கின்றது.

இப்பகைப்புலத்தில் இணுவில் பொதுநூலகத்தினருடன் இணைந்து புத்தாக்க அரங்க கலைஞர்களினால் "வாசிப்பதினால் மனிதன் பூரணமடைகின்றான்" எனும் தெருவெளி ஆற்றுகையானது யாழ்.மாட்ட பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்களில் நிகழ்தப்பட்டன.

இன்றைய பொழுதுகளில் அனைவரினாலும் குறை கூறப்படுகின்ற விடயமாக வாசிப்பு பழக்கம் அருகிவிட்டது பெரும்பாலும் யாருமே வாசிப்பதில்லலை எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற போதிலும் அதற்கான மாற்று சிந்தனையுடன் இயங்குகின்றவர்கள் வெகுவாக குறைந்து காணப்படுகின்றனர்.


வாசிப்பு என்பது ஓர் பேரியக்கமாகும் இவ் இயக்கத்தினால் தான் ஆரோக்கியமான சமூதாயத்தினை கட்டியெழுப்பமுடியும் எனும் யதார்த்தத்தினை உனர்ந்து கொண்டு இவ்வரங்க செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பற்ற சமூகம் ஊன முற்ற சமூகமாக மாறி விடும். வாசிப்பில்லையேல் சமூகத்தில் உயிப்பினை தரிசிக்க முடியாது. புத்த கங்களுடன் உறவாடுபவர் கள் தம்மை புடம் போட்டு கொள்கின்றார்கள். மனிதர் களினை அறிந்து கொள்கின் றார்கள். அவர்களால் எதை யும் எளிமையாகவும் நிதான மாகவும் அனுக்கிக் கொள்ள கூடியதாக இருக்கும்.





ஒரு தலை முறை வாசிப்பின் நுகர்ச்சியற்று போய் அடுத்த தலைமுறையினையும் நல் வழிப்படுத்த முடியாமல் அல் லல் உறுகின்றது எனும் கூற் றினை தவிர்க்கமுடியாமல் ஏற் றுக்கொள்ள வேண்டிய சூழ் நிலை உண்டு. ஆயினும் அத் தகையவர்களில் பிடியில்



இருந்து இளையதலைமுறை யினை குறிப்பாக இளம் பராயத்தினராகிய சிறுவர்கள் சரியான பாதையில் நடை பயில்வதற்கு வழிப்படுத்த வேண்டிய தார்மீகப்பொறுப்பு புத்திஜீவிகளினது கைகளில் உள்ளது என்பது கசப்பான உண்மையாகும்.

தாம் வாசிக்காது விட்டாலும் இளம் தலைமுறையினரை வாசிப்பின் செயல் தளத்தில் இயங்க அனுமதியாதவர்கள் கூட சமூகத்தில் விரவிக் காணப்படுவதுடன் வெறுமனே பரீட்சை மையக்கல்வியின் பால் பற்றுதி கொண்டு செயல்படுகின்றவர்களினையும் சமகாலத்தில் தரிசிக்கவேண்டிய அவலம் உண்டு. ஆயினும் இவற்றின் மத்தியில் இருந்து சவால்களிற்கு முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து வாசிப்பின் மகத்துவத்தினை இளம் தலை முறையினர் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் எனும் பேராவாவின் வெளிப்பாட்டின் ஊடாக வாசிப்பதால் மனிதன் பூரனமடைகின்றான் எனும் தெருவெளி அரங்கு எனும் வடிவம் முகிழ்ந்தெழுந்தது.

அரங்கு கதையாடல் வெளிகளினை சூழமைப்பதினை அடிப்படையாக்கொண்டு இயங்கியல் வெளிகளினை தகவமைத்து கொள்கின்றன.

தெரு வெளி அரங்கானது பெரு வெளிக்குள் நின்று பார்ப்போனுடன் இணைந்து அவனோடு உறவாடி உயிப்புடன் இணையும் வடிவமாகும்.

இப்பகைப்புலத்தில் இவ் வாற்றுகையில் ஈடுபட்டது மாறுபட்ட அநுபவமாக காணப்ப டுகின்றது.

வாசிப்பென்பது அருகிவிட்டது எனும் கருத்து நிலை பலரிடையே விரவிக்கானப்படுகின்ற போதும் வாசிப்பின் மகத்துவத்தினை இளைய தலைமுறையினர் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கிலும் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது எனும் தளத்தில் வெறுமனே புத்தகப்பூச்சிகளாக இருந்து விடுவதினால் எதையும் சாதிக்க முடியாது என்பதினை மைய ஊடு பொருளாக கொண்டு நகைச்சுவையுனர்வின் ஊடாக பார்ப்போரிடையே கொண்டு செல்லப்பட்டது.

அளிக்கையானது கேளிக்கையானதாக வடிவமைக்கப்படாது ஆழமான கருத்தாழம் மிக்கவை யாக வடிவமைக்கப்பட்டிருந்தன.

பாடசாலை வெளிகளே இலக்கு வெளிகளாக கொண்டமைந்திருந்தமையினால் மாணவர்களுக்கான உணர்வு வெளியினை அடிப்படையாக கொண்டு ஆற்றுகைகள் தகவமைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு பாடசாலை வெளிகளும் எமக்கு புதிய பாடங்களினை தந்திருந்தன. ஆற்றுகையாளர்கள் மாணவர்கள் அவர்களது அநுபவம் மாறுபட்டது. பல நாடகங்களினை நடித்து அநுபவப்பட்டவர்களும் இல்லை மாறாக அர்ப்ணிப்புடன் இயங்கக்கூடிய மனத்தைரியம் உடையவர்கள் எனும் வகையிலும் ஆற்றுகையின் தரம் கனதியாக வெளிப்பிட்டது.

இவ்வாற்றுகைக்கான நெறியாழ்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாக பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இவ் ஆற்றுகையின் தெருவாடிகளயாய் உஸாந்தன் ,மகிந்தன் ,நிதர்சன் ,திலக்ஸன் ,தபேன்சன் ,லோன்சன் , கவிராஜ், பிரசாந்தன், தயானிசன் இலிவீசனன் போன்றோர் செயற்ப்பட்டனர்.

இவ்வாற்றுகையானது 100 ற்க்கு மேற்ப்பட்ட இடங்களில் ஆற்றுகைசெய்யப்பட்டன. இவற்றில் உடுவில் மகளிர்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி ,மானிப்பாய் இந்துக் கல்லூரி , யாழ்ப்பானம் மத்தியகல்லூரி ,யாழ்.இந்துக்கல்லூரி ,இணுவில் இந்துக்கல்லூரி இனுவில்மத்திய கல்லூரி ,இராமநாதன்கல்லூரி ,மானிப்பாய்மெமோறியல் ஆங்கில பாடசாலை , கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளின் ஆற்றுகைகளையும் கோப்பாய் கலைவாணி கல்வி நிலையம் ஏ.ரி.சி கல்வி நிலையம் எடிசன் அக்கடமி போன்ற தனியார்கல்வி நிலையங்களில் இடம் பெற்ற ஆற்றுகைகளையும் குறிப்பிடலாம்.

இலக்கு பார்வையாளர்களாகிய மாணவர்களது ரசனைக்கு ஏற்றால்போலும் அவர்களது சிந்தனையினை கிளரும் வகையிலும் ஆற்றுகைக்கள் செப்பனிடப்பட்டு இடம்பெற்றமை யினை ஆற்றுகையின் பின்னாக கருத்தாடல் வெளிகள் வெளிப்படுத்தி நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் இந்துக்கல்லூரியில் ஆற்றுகையின் பின் பொறுப்பாசிரியர் குறிப்பிடும் போது நாங்கள் வகுப்பறையில் 40 நிமிடங்கள் ஒரு மணி நேரமாக குறிப்பிடுகின்ற விடயங்களினை மிகவும் எளிமையான வகையில் மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடியவகையில் எளிமை யான வகையில் நகைச்சுவை உணர்வின் ஊடாக வெளிக்கொணர்ந்தமை சிறப்பான விடயம் என்றார்.

தெருவாடி உஸாந்தன் கருத்து வெளியிடும் போது நான் ஏற்று நடித்த வாத்தியர் எனும் பாத்திர மானது சிறப்பான வரவேற்ப்பினை நாம் நிகழ்த்திய பல பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் பெற்றுக் கொண்டது. பலர் பாராட்டியமை மகிழ்ச்சியாக இருந்தது. எமது பாடசாலையில் நிகழ்த்திய போது எமது கல்லூரி அதிபர் எமது நாடகத்தினைமிகவும் ரசித்தார். ஆயினும் சில ஆசிரியர்கள் நாங் கள் நடிக்கின்றோம் என்பதினால் பார்க்கவிரும்பவில்லலை இது அவர்களது குறுகிய சிந்தனை யினை எமக்கு எடுத்து காட்டியது பிற இடங்களில் நிகழ்த்தப்பட்ட போது நாம் ஒவ்வொருவரும் ஏற்று நடித்த பத்திரங்கள் தொடர்பாக வும் பலரும் பாராட்டியமை எம க்கு தொடர்ந்தும் நாடகங்கள் நடிக்க வேண்டும் எனும் ஆர்வத் தினை ஏற்ப்படுத்தியுள்ளது.



இவ்வாற்றுகையின் தரம் என்பது பார்ப்போர்களது ரசனையிலேயே தங்கியிருந்தது. நாம் நிகழ்த்திய பல இடங்களிலும் சிறப்பான வரவேற்ப்பு கிடைத்தது சான்றாக உடுவில் மகளிர் கல்லூாரியில் எமது ஆற்றுகையினை கண்டு களிப்பதற்காக எமது வருகையினை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்ததுடன் இன்றைய தேவையின் அவசியம் உணர்த்தப்பட்டதினை சுட்டிக்காட்டினர்.

கோப்பாய் கலைவாணி கல்வி நிலைய நிர்வாகி குறிப்பிடும்போது: பேசுகின்ற விடயம் சிறப்பானதாகும். மேலும் நடிகர்களது நடிப்பு சிறப்பாக காணப்பட்டது. சினிமா நடிகர்களினை பார்த்து பரீட்சியப்பட்ட எமக்கு அவர்களது நடிப்பு மாறுபட்டதாக அமைந் தது என்றார்.

தொகுத்து நோக்குகின்ற போது இவ்வாற்றுகையின் படைப்பாக்க இயங்கு நிலை மாறுபட்டதாக இருந்தது.வாசிப்பின் பேரியக்கத்திற்கான செயல்நிலையாக அமைந்திருந் தது.சமூகம் கொண்டுள்ள பிரச்சினையினை தீர்ப்பதற்கும் அவர்களினை விழிப்பு நிலை கொள்வதற்கான வாய்ப்பினையும் இவ்வாற்றுகைகள் ஏற்படுத்தின. இதற்கு சான்றாக பலர் நூலக அங்கத்தவர்களாக புதிதாக இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய செயல் நிலைகள் காலத்தின் தேவை கருதி மேற்க்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பதிக்கு போயிருக்கிறீர்களா?. ஏழுமலையானை தரிசித்திருக்கின்றீர்களா? இல்லையெனில் இக்கோயில் பற்றிய இந்த அதிசய தகவல்கள் தான் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா? படித்து விட்டு அக்டோபரில் துவங்கும் நவராத்திரிபிரம்மோற்ஸவத்திற்கு போய் வாருங்கள்.

★ தெய்வச் சிலைகள் பொதுவாக கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும். எங்காவது ஒரிடத்திலாவது சிற்பியின் உளி பட்ட இடம் தெரியும். ஆனால், இப்படி எவ் விதமான அடையாளத்தையும் வெங்கடாஜபதி சிலையில் காணமுடியாது. அது மட்டுமல்ல! சிலையில் வடிக்கப்பட்டுள்ள நெற்றிச் சுட்டி, காதணிகள், புருவங்கள், நாகாபரணங்கள் எல்லாம் பாலீஷ் போட்ட நகைபோல பளபளப்பாக மின்னுகின்றன.

★ திருமலை *3000* அடி உயரத்தில் உள்ள குளிர்பிரதேசம். இருந்தாலும், அதிகாலை *4.30* மணிக்கு குளிர்ந்த நீரால் அபிஷேகம் செய்யும் போது, பெருமாளுக்கு வியர்த்து விடும். பீதாம்பரத்தால் அந்த வியர்வையை ஒற்றி எடுப்பார்கள். ஏனெனில், ஏழுமலையான் சிலை எப்போதும் *110* டிகிரி வெப்பத்திலேயே இருக்கும் இது ஒரு அதிசயம் தானே!



★ ஒவ்வொரு வியாழக்கிழமையும், ஏழுமலையானுக்கு அபிஷேகம் செய்வதற்கு முன்னதாக நகைகளைக் களைவர். அப்போது ஏழுமலையானின் ஆபரணங்கள் சூடாகக் கொதிப்பதை உணர்கின்றனர்.


★ இங்குள்ள மடைப்பள்ளி மிகவும் பெரியது. இங்கு லட்டு, பொங்கல், தயிர்சாதம், புளிச்சாதம், வடை, முறுக்கு, ஜிலேபி, அதிரசம், போளி, அப்பம், பாயாசம், தோசை, ரவாகேசரி, பாதாம்கேசரி, முந்திரிப் பருப்பு கேசரி ஆகியவை தினமும் தயாராகின்றன. இதில் லட்டு முதலிடம் பெற்று விளங்குகிறது.

★ ஏழுமலையானுக்கு ஒருபுதிய மண்சட்டியிலேயே பிரசாதம் படைப்பர். தயிர் சாதம் தவிர வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழுமலையான்



★ எந்த நைவேத்யமும், கர்ப்பகிரகத்திற்கு முன்னுள்ள குலசேகரப்படியைத் தாண்டுவதில்லை. இந்த மண் சட்டியும், தயிர்சாதமும் பிரசாதமாக கிடைப்பதை வாழ்வில் மிகப்பெரிய பாக்கியமாகப் பக்தர்கள் கருதுகின்றனர்.

★ பெருமாளுக்கு உடுப்பு மிகவும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்படுகிறது. ஒரு முழம் நீளமும், ஆறு கிலோ எடையும் கொண்ட பட்டுப்புடவை பீதாம்பரமே இவருக்குரிய ஆடையாகத் திகழ்கிறது. இதை பெருமாளுக்கு சாத்த அலுவலகத்தில் 12 ஆயிரத்து 500 ரூபாய் செலுத்த வேண்டும். இந்த ஆடைக்கு மேல்சாத்து வஸ்திரம் என்று பெயர். வெள்ளியன்று மட்டுமே இதை அணிவிக்க முடியும். பணம் செலுத்தியவர்கள் வஸ்திரம் சாத்த 3 வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

★ உள்சாத்து வஸ்திரம் என்ற ஆடையையும் பெருமாளுக்கு அணிவிப்பர். இதற்குரிய கட்டணம் 20 ஆயிரம் ரூபாய். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 15 வஸ்திரங்கள் சாத்துவதற்கு அனுமதிக்கிறார்கள். பணம் செலுத்தியபின் இதை அணிவிக்க 10 வருடங்கள் காத்திருக்கவேண்டும்.

★ பக்தர்கள் சமர்ப்பிக்கும் வஸ்திரங்கள் தவிர, அரசாங்கம் சமர்ப்பிக்கும் வஸ்திரங்களை ஆண்டுக்கு இரண்டு முறை பெருமாளுக்கு அணிவிக்கின்றனர்.

**ஏழுமலையானின் அபிஷேகத்திற்கு எங்கிருந்து பொருட்கள் வருகிறது தெரியுமா?**

★ ஸ்பெயினில் இருந்து குங்குமப்பூ, நேபாளத்தில் இருந்து கஸ்தூரி, சீனாவில் இருந்து புனுகு, பாரீசில் இருந்து வாசனைத் திரவியங்கள் வருகின்றன. ஒரு தங்கத் தாம்பாளத்தில் சந்தனத்தோடு கரைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்படும். 51 வட்டில் பால் அபிஷேகம் செய்தபின், கஸ்தூரியும், புனுகும் சாத்துவர். தினமும் காலை 4.30- 5.30 மணிக்குள் அபிஷேகம் நடக்கும். அபிஷேகத்திற்கு ஆகும் செலவு ஒரு லட்சம். பணம் செலுத்தியவர்கள் 3 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாளுக்குரிய ரோஜாப்பூக்கள் ஐரோப்பாவில் உள்ள ஆம்ஸ்டர்டாமில் இருந்து விமானத்தில் கொண்டு வரப்படுகின்றன. ஒரு ரோஜாப்பூவின் விலை ரூ.80. பக்தர்களின் செலவிலேயே இந்தப் பூக்கள் வந்து சேர்கின்றன.

சீனாவில் இருந்து கற்பூரம், அகில், சந்தனம், அம்பர், தக்கோலம், லவங்கம், குங்குமம், தமாலம், நிரியாசம் போன்ற வாசனைப்பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன.

ஏழுமலையானின் நகைகளின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய். இவருடைய நகைகளை வைத்துக் கொள்ள இடமும் இல்லை. சாத்துவதற்கு நேரமும் இல்லை.

ஏழுமலையான் சாத்தியிருக்கும் சாளக்கிராம தங்கமாலை 12 கிலோ எடை கொண்டது. இதை 3 அர்ச்சகர்கள் சேர்ந்து தான் சாத்தமுடியும். சூரிய கடாரியின் எடை 5 கிலோ. ஒற்றைக்கல் நீலம் மட்டும் 100 கோடி மதிப்பு கொண்டது. உலகிலேயே இதைப்போன்ற நீலக்கல் வேறு கிடையாது.

பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள் பெருமாளுக்கு காணிக்கைகளைச் செலுத்தியுள்ளனர். ராஜேந்திரச்சோழன், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர் ஆகியோருடைய திருப்பணிகள் கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

மராட்டிய மன்னர் ராகோஜி போன்ஸ்லே மிகப்பெரிய எமரால்ட் பச்சைக்கல்லை பெருமாளுக்கு காணிக்கையாக்கியுள்ளார். இப்பதக்கம் இவருடைய பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலில் பலதிருப்பணிகள் செய்த கிருஷ்ணதேவராயர் தனது மனைவியுடன் நிற்கும் சிலை கோயிலில் உள்ளது. கோயிலுக்குள் வரிசையில் செல்லும் போது இதைக் காணலாம்.

வெள்ளி வெங்கடாஜபதி விக்ரகம் 966ம் ஆண்டில் செய்யப்பட்டதாகும். பல்லவ மன்னன் சக்திவிடங்கனின் மனைவி காடவன் பெருந்தேவி இந்த விக்ரகத்திற்குரிய நகைகள் தந்துள்ளார்.

திருமலை திருப்பதி கோயில் ஸ்தலவிருட்சம் புளியமரம்.

சாத்வீக கோலத்தில் இருந்தாலும் தெய்வீக கோலங்களில் ஆயுதம் இடம்பெற்றிருக்கும். ஆனால், திருமலையில் ஏழுமலையான் எவ்விதமான ஆயுதமும் பிடிக்காமல் நிராயுத பாணியாக சேவை சாதிக்கிறார்.

ஆங்கிலேயர்களில் சர்தாமஸ் மன்றோ, கர்னல் ஜியோ ஸ்டிராட்டன், லெவெல்லியன் என்ற வீரர் ஆகியோர் பெருமாளின் பக்தர்களாக இருந்ததோடு பல நேர்த்திக்கடன்களைச் செலுத்தியுள்ளனர். இதில் இன்று வரை பெருமாளுக்கு மன்றோ தளிகை என்றொரு ஒரு நிவேதனம் ஆங்கிலேயர் பெயரால் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

திருப்பதி அலமேல்மங்கைக்குரிய ஆடை கத்வால் என்னும் ஊரில் பருத்தியில் தயாரிக்கப்படுகிறது. செஞ்சு இனத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் இதை பயபக்தியுடன் நெய்கிறார்கள். தாயாரின் திருமேனியில் படும் இந்த ஆடையை நெய்யும் போது மூன்றுவேளை குளிப்பதும், மாமிசம் உண்ணாமல் இருப்பதும் ஆகிய நடைமுறைகளைத் தவறாமல் பின்பற்றுகின்றனர்.

1180 கல்வெட்டுகள் இங்கு உள்ளன. இதில் 1130 கல்வெட்டுகள் தமிழ் மொழியிலும், 50 கல்வெட்டுகள் தெலுங்கு மற்றும் கன்னட மொழியிலும் அமைந்துள்ளன.

இந்த தகவல்கள் திருமலை திருப்பதி கோயில் ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

# Now in Jaffna



BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)

↑

**BTEC HND**
Full Time / Part Time

↑

Foundation Course ↑ O/L | After A/L

## BTEC HND in

- Quantity Surveying
- Civil Engineering
- Law
- Business Management
- Computing & Systems Development
- Biomedical Science
- Psychology

*Leading to BSc(Hons) / LLB(Hons) / BA(Hons) / BEng(Hons) From more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...*



BCAS Awarded
"Performance Excellence"
for the years 2010 & 2011
by Edexcel - UK

**100%** වහා රැකියා අවස්ථාවන් සඳහා...
உடன் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும்...
**Job Oriented Courses...**

- **CAD & Building Studies**

**Degree Foundation Courses**

- IEF (International Engineering Foundation)
- ACCESS Programme
- B-MAC

***Building Careers - Transforming Lives***

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**www.bcas.lk**

**Jaffna Campus :** 16, Point Pedro Road, Jaffna.
Tel : 0212219910

Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After A/Level's



## Obtain a Dual Diploma in 4 months !

**Only IT Diploma with an International Recognition!**

**DiTEC INTERNATIONAL**

**Diploma in Information Technology**

**Duration : 4 months** | **Free Text Books**

***With International Certification Rs. 22,500***

**DiE**

**Diploma in English**

**FREE DVD** *with Role-play Videos*

**Duration : 4 months** | **Free Text Books**

## *Dual Diploma Rs. 26,500 Only*

**FREE T-SHIRT**

given for all registration

Bring this leaflet or SMS Your Name

**077 309 9 308**

before 31th May 2013

to obtain your Free T-shirt

## *Other Diplomas*

***Diploma in Software Engineering***

Duration : 6 months | Free text Books

***Diploma in Web Engineering***

Duration : 6 months | Free text Books

***Diploma in Computerized Accounting***

Duration : 5 months | Free text Books

***Diploma in Business Management***

Duration : 4 months | Free text Books

***Diploma in Hardware & Networking***

Duration : 4 months | Free text Books

***Diploma in Multimedia***

Duration : 8 months | Free text Books

**ESOFT**

*Shaping Lives, Creating Futures.*

# ESOFT METRO CAMPUS

**No 137, K.K.S Road, Jaffna**

**HOTLINE : 077 309 9 308 | WWW.ESOFT.LK**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org